அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை

Page. No. [redacted] 573

Accession. No. 18586

மலர்: 8
இதழ்: 12
விலை அ. 4

துன்முகி ௵ பங்குனி ௴
மார்ச்—ஏப்ரல் '57

வருட
சந்தா
ரூ. 2-4-0



மங்கையர்க்கரசியும் குலச்சிறையும்
ஞானசம்பந்தரை மதுரையில் வரவேற்றல்
சித்திர விளக்கம் 36 : பக்கம் 654

பொருளடக்கம்

			பக்கம்
1. *தாலாட்டும் தவம்*	*(திருப்புகழ் மணி)*	...	*629*
2. *யோக சல்லாபன்*	*(கி. வா. ஜகந்நாதன்)*	...	*632*
3. *ரெட்டியார்*	*(ஸ்ரீ ரஸபதி)*	...	*637*
4. *உள்ளது ஒன்றே*	*(சிவாநந்த விஜயலக்ஷ்மி)*	...	*647*
5. *மதுரைமா நகர் புகுதல்*	*(கி. வா. ஜ.)*	...	*654*
6. *அருணகிரியும் ஐம்பூதத் தலங்களும்* *(திருப்புகழ் சதுரர் S. T. இராமலிங்கம்பிள்ளை B.A.B.T.,)*			*659*
7. *திருப்புகழ் விரிவுரை*	*(குகஸ்ரீ)*	...	*666*
8. The Divine Elections	*(Thiruppugal Mani)*	...	*674*
9. News Papers Rules		...	*676*

அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 9—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள.

அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே

மலர் 8	துன்முகி ௵ பங்குனி ௴ மார்ச்—ஏப்ரல்-57	இதழ் 12

தாலாட்டும் தவம்

(திருப்புகழ் மணி)

விண் என்னும் உத்தரத்தில் அன்பெனும் தாம் பிட்டு, மண் என்னும் தொட்டிலிட்டு, எண்ணடங்கா ஜீவன்களாகிய குழந்தைகளை ஏற்றி, 'கண்வளராய்' என்று ஆட்டும் தாய் பக்கத்திலேயே நிற்க, கவலை யேன்? ஆயினும் குழந்தைகள் இயல்பு, கொஞ்சம் அழத்தான் அழும். செல்ல அழுகையுமுண்டு, கள்ள அழுகையுமுண்டு, நிஜ அழுகையுமுண்டு. ஏமாற்றமோ, நோவோ, எவற்றினு லாயினும் குழந்தைகள் மனம் முறிந்தால், அம்மாவிடத்தில் சொல்லி யழுதால்தான் ஆறுதல். இந்த ஆறுதலுக்கு இணங்காத வருத்தம் குழந்தைகளுக்குக் கிடையாது. "யாரா ரடித்தாரோ அடித்தாரைச் சொல்லியழு" எனப்பாடுவள் தாய். நொந்த மனம் அம்மாவிடம் சொல்லி அழுதுவிட்டால் சரியாய்ப் போய்விடும். இதையறிந்த தாய் குழந்தை யழ, அதைத் தொட்டிலிலிட்டு பக்கத்தில் நின்று பாடிடு வரள்.

அண்டங்கள் யாவும் அணுவில் அடைத்ததிறம்
எண்தங்க வைத்தாய்! எமக்கருளல் என்றேயோ ?

தாயின் மனம் குழந்தையிடந்தான். அவள் குழந்தையையா ஆட்டுகின்ருள்? இல்லே. தன் மனத்தையும் அத்தொட்டிலிலிட்டு ஆட்டுகின்ருள். தன் மனம் பூரிக்கின்றது. நெகிழ்ந்த மிடற்றினின்று பெருகும் மகிழ்ந்த இசைகள், அவிழ்ந்த அன்பின் உணர்ச்சி; செந்தமிழ் அமுது பொழிகின்றது. குழந்தையின் கண்கள் தாயின் முகத்தினேயே நோக்கி நிற்கின்றன. அவள் புன்சிரிப்பை நுகர்ந்து நுகர்ந்து, அந்தப் போதையினுல் கொஞ்சம் கொஞ்சமாக உடம்பின் உணர்வழிந்து, தாயின் முலேயருந்துவது போல் கனவில் மாறி, தாய் நினேவில் தூக்கம் உறுகின்றது. யார்தான் இதை அறியமாட்டார்?

நாள் முழுதும் வேலே. சரீரம் மிக அலுப்புக் கொண்டது. சேயைப் பார்த்துப் பாடிப்பாடி தொட்டில் கயிற்றில் தன் உடம்பின் பளுவை ஒரு பக்கமாய்ச் சாய்த்து, "குழந்தை துயில் கொண்டதா துயில் கொண்டதா" வென்று பார்த்த வண்ணமாய் தாயும் தன்னே மறக்கின்ருள். சேயும் தாயாகி தாயும் சேயாளுல் எய்தும் நிலே யாதோ? சமாதி.

தாயின் வயிற்றில் அவதரித்துப் பிரிந்த சுகம், தாயுடன் சமாதியில் கூடும் சுகம்தான். மக்கள் பிரிய வேண்டும். பிரியவும் பிரிகின்ருர்கள். பிரிந்த பலன் சேர்க்கைக்கன்ருே? யோக சமாதியை யல்லவோ தாலாட்டும் தாய் போதிக்கின்ருள்?

இந்த சுகத்தை அநுபவிக்க நினேத்தாள் பராசக்தி. முருகனேப் பெற்ருள். "பெற்றும் உகந்தது கந்தனேயே" என்று ஞானசம்பந்தர் பாடிஞர்.

சுடர் ஜோதியாய் உதித்த முருகனுக்கு, வெப்பத்தின் சாந்தமாக சரவணத்தில் செந்தாமரைப் புஷ்ப

பிள்ளேவிளே யாட்டேபோல் பேருலகம் தந்தாய்! என்
உள்ளத் திருந்தே உவந்தருளல் என்றேயோ

மாக தொட்டில் சமைத்திட்டாளாம். அருணகிரியார் திருப்புகழால் தாலாட்டுகிருர் :

முக்கணர் மெச்சிய பாலா சீலா
சித்தஜன் மைத்துன வேளே தோளார்
மொய்த்த மணத்துழாயோன் மாயோன் மருகோனே
முத்தமிழ் வித்வ விநோதா கீதா
மற்றவர் ஒப்பில ரூபா தீபா
முத்திகொடுத்தடியார் மேல் மாமால் முருகோனே.

முருகன் அழுதாராம். "ஏன் அழுகின்ருய் கண்ணு?" என்ருள் பார்வதி. மறுபடியும் முருகன் நீண்டு அழுதவுடன் குறிப்பாய்க் கவனித்தாள். வேறு அழுகைக் குரல்கள் கேட்டனவாம். மாயையின் அழுகைக் குரல் கேட்டதாம். சூரன் அழுகை, சம்சார சமுத்திரத்தின் அழுகை ஓசை. இவற்றுக்கு ஒத்து முருகன் அழுகைக் குரலும் கேட்டதாம். முருகன் குறும்புக் குழந்தை யல்லவா ?

யாராவது அழுதுகொண்டிருந்தால் குழந்தைகளுக்குப் பிடிக்காது; அழுகையின் அழகை பரிகசிப்பது போல் தானும் கள்ளத்தனமாய் அழுதுவிட்டு ஓடி விடும். இது குழந்தையின் இயல்பு. கிரௌஞ்சக் குன்று, சூரன், சம்சார சமுத்திரம் இம் மூன்றும் கெட்டுப்போகக் காலம் வந்ததால், அவை அழும் அழுகைக்கு ஒத்து ஒரு ஸ்ருதியாய் தானும் அழுது காண்பித்தானும் முருகன். பராசக்தி ஆனந்தித்தாள். இதைச் சித்திரிக்கின்ருர் அருணகிரி:

திருந்தப் புவனங்க ளீன்றபொற் பாவை திருமுலைப்பால்
அருந்திச் சரவணப் பூந்தொட்டி லேறி யறுவர் கொங்கை
விரும்பிக் கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவனென் றேதுங் குவலயமே.

இது கந்தரலங்காரச் சித்திரம்:

விருப்புவெறுப் பில்லார் அகத்து விளையாட
ஒருப்படுவாய்! என்னை உவந்தேற்றல் என்றேயோ

கண்ணனைத் தொட்டி விட்டாரோ?
அவனை யாரென ஆராய்ந் தாரோ?
தன்னை மறந்தாரோ?
உணர்ந்தவகை யாரறிவார்!

சடகோபாழ்வார் பாடுகின்றார்:

"ஒளிமணி வண்ணனென்கோ ஒருவனென்று ஏத்தநின்ற
நளிர்மதிச் சடையனென்கோ நான்முகக் கடவுளென்கோ
அளிமகிழ்ந்து உலகமெல்லாம் படைத்தவை ஏத்த நின்ற
களிமலர் துளவன் எம்மான் கண்ணனை மாயனையே!'

"கண்ணனை மாயன்தன்னைக் கடல்கடைந் தமுதம்கொண்ட
அண்ணலை அச்சுதனை அனந்தனை அனந்தன் தன்மேல்
நண்ணிநன் குறைகின்றானை ஞாலமுண் டுமிழ்ந்த மாலை
எண்ணுமா றறிய மாட்டேன் யாவையும் அவரும் தானே."

உலகுக்கெல்லாம் ஒப்பற்ற சேயாய், சொந்தமாய் எடுப்போர்க்கெல்லாம் குழந்தையாய், நம் குருவாய்த் தாவிவரும் முரளிமுருகனைத் தாலாட்டக் கற்ற அன்பர்கள், உலகில் இருக்கும் ஜீவன்களைத் தம் குழந்தைகளாகவும், மங்கையர்களைத் தாய்மார்களாகவும் கருதி, பட்டினத்தார் உபதேசத்துக்கு ஒப்பப் பேரின்பம் அடைவர் என்பதில் ஐயமுண்டோ? இல்லை என்கிறான் முரளி முருகன்.

யோகசல்லாபன்

(கி. வா. ஜகந்நாதன்)

முருகன் யோகிகளுக்கும் அருள் செய்யும் கடவுள். கந்தர் அலங்காரத்தில்

"சிவயோக மென்னும்
குருத்தை அறிந்து முகமா றுடைக்குரு
நாதன் சொன்ன

பாரவுரு வானாய்! பரமஅணு வுள்ளுறைவாய்!
வாரங்கொண் டென்னை வயப்படுத்தல் என்றேயோ

கருத்தை மனத்தில் இருத்தும்கண் டீர்முத்தி
கைகண்டதே"

என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

யோகம் செய்வார் மூலாதாரத்தில் உள்ள அக்கினியை எழுப்பி ஆதாரம் ஆறினையும் கடக்கச் செய்து, அப்பா லுள்ள சந்திரமண்டலத்தில் தாக்கும்போது பொழியும் அமுத தாரையை உண்டு இன்புறுவர் என்று சொல்வர். இவ்வாறு சுவாசபந்தனம் முதலியவற்றால் மூல அக்கினி எழும்போது, இடையிலே சுருண்டு வழியிடையாக இருக் கும் குண்டலினி தடையாக நிற்கும். அதை எழச்செய்து இயக்கினால் யோகம் தடையின்றி நிறைவேறும். பாம்பு போலப் படுத்திருக்கும் குண்டலி சக்தியை நாகமென்றே கூறுவதும் உண்டு. உறங்கிச் சுருண்டு கிடக்கும் அதை எழுப்பி ஓடச் செய்வதால் யோகம் கைகூடும் வழிபிறக்கும். இதனால் இந்த யோகத்தைக் குண்டலி யோகம் என்றும் சொல்வார்கள்.

காற்றுக்கு வாசி என்று ஒரு பெயர். அதை அடக்கு வதனால் மூலக்கனல் எழும்பும். அதனால் வாசியோகம் என்றும் பெயர் பெறும்.

இடைகலை பிங்கலையாகிற இரண்டு நாடிகளுக்கும் இடையே இருப்பது சுழுமுனைநாடி. மூச்சு இடைகலை பிங் கலை என்பவற்றில் இயங்காது சுழுமுனையில் இயங்கப் பண்ணுவது யோகத்தின் முதற் படி. சுழுமுனையில் மூச்சு ஓடும்போதுதான் ஆறு ஆதாரங்களையும் கடந்து மூல அக்கினி செல்லும்.

இடைகலையைச் சந்திர கலையென்றும் பிங்கலையைச் சூரியகலையென்றும் வழங்குவர். சுழுமுனை அக்கினி அம்ச முடையது; இடைகலை சக்தியம்சம்; பிங்கலை சிவாம்சம். இடைகலை பிங்கலை என்னும் இரண்டுக்கும் நடுவே உள் ளது சுழுமுனை. அது முருகப் பெருமான் அம்சம். உமா

பொய்யான வாழ்க்கை பொசுங்கி யழியுமுனே
மெய்யாம் திருஎன்னை மேவுவதும் என்றேயோ

தேவியும் பரமேசுவரனும் வீற்றிருக்க, இடையே முருகன் எழுந்தருளியிருக்கும் மூர்த்தத்தை ஸோமாஸ்கந்த மூர்த்தம் என்று கூறுவார்கள். அந்த மூர்த்தம் போன்று அமைந்த மூன்று நாடிகளில் சுழுமுனை இடையில் நின்ற முருகனைப் போன்றது. அதன் வழியே மூலக்கனலை வாசியால் செலுத்தும்போது குண்டலியை எழுப்பவேண்டும். பாம்பை மயில் எழுப்பிவிடும். மயிலைக்கண்டால் பாம்பு முடங்கிக் கிடக்காது; எழுந்து ஓடும். முருகன் வாகனமாகிய மயில் சுழுமுனையில் இயங்கும் வாசியைப் போன்றது. அது பாம்புக்குப் பகை. யோகியர்கள் குண்டலியினுல் உண்டாகும் தடையை மாற்றி அதை இயங்க வைக்க மயில் வாகனப் பெருமானைத் தியானம் செய்வார்கள்.

வாசியில் ஏறி வருவாண்டி—ஒரு
வாசி நடத்தித் தருவாண்டி

என்று அருட்பிரகாச வள்ளலார் பாடுகிருர். மயிலாகிய வாகனத்தின் மேல் ஏறிவரும் முருகன் யோகியர்களுக்கு வாசி யோகத்தை நடத்தித் தருவானும். எழும்பாத குண்டலியை எழுப்ப அருள் புரிபவன் அல்லவா?

இத்தகைய பெருமான் யோகியர்களுக்கு யோக வகைகளையெல்லாம் வாய் மலர்வான். முன்னே சொன்ன கந்தர் அலங்காரப் பாட்டில், "முகம் ஆறுடைக் குருநாதன் சொன்ன சீலம்" என்பது அதையே சுட்டுகிறது. அருணகிரிநாதர் அதை அநுபவத்தால் உணர்ந்தவர். ஆதலால் முருகன் செய்யும் சல்லாப வகைகளில் யோகம் பற்றிய உபதேசத்தையும் ஒன்ருக வைக்கிருர். யோகத்தின் சம்பந்தமான பலவகைச் சல்லாபங்கள் செய்கிறவன் நீ அல்லவா?" என்று கேட்கிருர்.

யோகவிதச்
சல்லாப விநோதனும் நீயல்லவோ?

உல்லாச சல்லாபம், நிராகுல சல்லாபம், யோகசல்லாபம் என்ற மூன்று வகையான சல்லாபங்களை

அப்புமுப்பும் போலேமெய் அத்துவிதம் ஓர்ந்தடியேன்
செப்பும் சிவஞானச் சிறப்புறுதல் என்றேயோ

இப்பாட்டில் சொன்னால் அவற்றிலும் பலவகை உண்டு என்று குறிப்பித்தார்.

இந்தச் சல்லாபங்கள் யாவும் அவனுக்கு ஒரு பொருளன அல்லன. ஐங்கலப்பாரம் சுமக்கும் ஒருவனுக்கு ஒரு படி நெல் சுமப்பது எப்படி விளையாட்டோ, அதுபோல இது அவனுக்கு விளையாட்டு மாத்திரமானது; விநோதச் செயல்.

இறைவன் ஆற்றும் எல்லாச் செயல்களும் விளையாடல்களே. அவனுடைய செயல்களைக்கூறும் மதுரைப் புராணத்துக்குத் திருவிளையாடற் புராணம் என்ற பெயர் அமைந்திருக்கிறதல்லவா? மனிதனுடைய செய்கைகளுக்கு இன்பம் துன்பம் என்ற விளைவு உண்டு. ஆனால் இறைவன் செயலோ அவனுக்கு மகிழ்ச்சியே தருவது. விளையாட்டுக்கும் வினைக்கும் வேறுபாடு உண்டு. நன்மை தீமை என்று இருவேறு பயன்களை உடையது வினை. விளையாட்டோ தம்மை நிகழ்த்துவாருக்கு இன்பத்தையே தருவது.

"இத்தகைய சல்லாபங்களை விநோதமாக, விளையாட்டாகப் புரிந்தருள்பவன் நீ அல்லவா? இப்போது நான் ஒன்று கேட்கிறேன். சொல்லியருள வேண்டும்" என்று அருணகிரியார் பாடுகிறார்.

> உல்லாச நிராகுல யோகவிதச்
> சல்லாப விநோதனும் நீயலையோ?
> எல்லாம் அற என்னை இழந்த நலம்
> சொல்லாய் முருகா சுரபூபதியே!

வேறு ஒரு வகையிலும் இதற்குப் பொருள் சொல்வதுண்டு. உல்லாசம் முதலியவற்றைத் தனித் தனிப் பண்புகளாக்கி முருகனுக்குள்ள ஆறு இயல்புகளை முன் இரண்டடிகளில் அருணகிரியார் சொல்வதாகக் கொள்ளவேண்டும். அவன் உல்லாசன், நிராகுலன், யோகன், இதன், சல்லாபன், விநோதன். உல்லாசன்-மகிழ்ச்சியை உடைய

நில்லாத காயத்துள் நீநின்றிவ் ஏழைக்குச்
சொல்லாத வார்த்தைகளைச் சொல்வதுவும் என்றேயோ

வன்; ஆனந்த உருவமாக இருக்கிறவன். நிராகுலன்—கவலை யற்றவன். யோகன்—யோகம் புரிவாருக்கு இன்பந்தருப வன். இதன்-அடியார்களுக்கு இதத்தையே புரிபவன். சல் லாபன்—நன்றாக விளையாடும் ஆற்றலுடையவன். விநோ தன்—திருவிளையாடல் பல புரிபவன். ஆதலால், ஆறு இயல்புகளை எடுத்துக் கூறினாரென்று கூறும் பொருத்தம் ஒன்று உண்டு.

முருகனிடம் ஒன்று சொல்லும்படி கேட்கிறார் அருண கிரிநாதர். அந்த நலத்தை மற்றவர்களுக்குச் சொல்லவேண் டும் என்ற விருப்பம் அவருக்கு எழுகிறது. ஆனால் அநுப வத்தால் உணர்வதையன்றி மனத்தால் நினைப்பதற்கும் அரியது அந்த நலம். நம்முடைய சல்லாபம் எல்லைக்கு உட்பட்டது. புலன் நுகர்ச்சிக்கு விஷயமாகிறவற்றையே இன்னபடி இருந்ததென்று விளக்கிச் சொல்ல நம்மால் இய லாது. அவ்வாறு இருக்க பொறிகடந்த இன்பத்தை எவ் வாறு சொல்வது?

"சொல்லொணா திந்த ஆனந்தமே"

என்று அலங்காரத்திலும்

"அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

என்று அநுபூதியிலும் அருணகிரிநாதர் சொல்வார்.

அவ்வாறு உள்ள ஒன்றைச் சொல்லவேண்டும் என்ற ஆசை தோன்றவே, "என்னால் முடியாதது இது. நீ மிகச் சிறந்தவற்றை யெல்லாம் திருவாய் மலர்ந்தருளுகிறவன். உல்லாச சல்லாபன், நிராகுலசல்லாபன், யோக சல்லாபன்; நீயே இதையும் சொல் அப்பா" என்று வேண்டிக் கொள்கி றார். அவன் சொல்வதைத் தாம் சொல்லவேண்டும் என் பது அவர் விருப்பம் போலும்! சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளையாக இருந்து கந்தர் அநுபூதியை அவர் பாடி னார் என்று கூறும் செய்திக்கு இந்தப் பாட்டையே ஆதார மாகக் கொள்ளலாம் அல்லவா?

கொம்மை யரவணியும் கொண்டலே குண்டலினிச்
செம்மைப்பாம் பாட்டுகின்ற சீர்காண்டல் என்றேயோ

முருகனடியார்—24.

ரெட்டியார்

(ஸ்ரீ ரஸபதி)

வடக்கே இருப்பது வடகாசி. தெற்கே இருப்பது தென்காசி. சிவகாசி என்றும் ஒரு ஊர் உண்டு. தென்காசியின் சமீபத்தில் சங்கரன் கோயில். அதன் அண்மையில் கரிவலம் வந்த நல்லூர். (கரி-யானை.) கரி ஒன்று சிவலிங்கத்தைக் கண்டது. வலம் வந்தது. பெருமானை வணங்கியது. அன்று முதல் அப்பெயர், அவ்வூர்க்கு அமைந்தது. பால்வண்ண நாதர், அவ்வூர்க் கோயில் பரமர். திருக்கருவைக் கலித்துறை அந்தாதி, திருக்கருவைப் பதிற்றுப் பத்து அந்தாதி என்று இரண்டு பிரபந்தங்கள், பால்வண்ண நாதர் மேல் பாடியவை. அவைகளுள் இருக்கும் ஒவ்வொரு பாடலும், உருக்கம் மிக்கவை. அதனால், அப்பாக்களைக் குட்டித் திருவாசகம் என்று கூறுவர்.

அஞ்சல் என்ற கரதலமும், கணபண கங்கணமும்,
அரைக்கிசைந்த புலியுடையும், அம்புலிச்செஞ் சடையும்,
கஞ்சமலர்ச் சேவடியும், கழைகழலும் சிலம்பும்,
கருணைபொழி திருமுகமும், கண்கள் ஒரு மூன்றும்,
நஞ்சையுண்ட மணிமிடறும், முந்நூலும் மார்பும்,
நலம்திகழ்வெண் ணீற்றொளியும், மறிமானும் மழுவும்,
பஞ்சடிச்சிற் றிடையுமையாள் ஒப்பனை பாகமுமாய்ப்,
பால்வண்ணன் உளத்திருக்கப் பயமுண்டோ எமக்கே

என்று வரதுங்க ராம பாண்டியர் பாடிய ஒரு பாடலில், பால் வண்ணரால் விளையும் பயன் விளங்குகிறது அல்லவா!

கரிவலம் வந்த நல்லூர்க்குப் பக்கத்தில், சென்னிகுளம் என்ற சிறந்த ஊர் ஒன்று இருக்கிறது. அவ்வூர் வீதியில், ரெட்டி வம்ச நான்கு வயது குழந்தை ஒன்று நடந்தது. மழலைப் பருவம். எனினும், வாயில் நல்ல தமிழ் வந்தது. பெற்றோர் திண்ணைப் பள்ளியில் சேர்த்தனர். அன்று முதல் சிறுவர், எண்ணும் எழுத்தும் கண்ணுற்றார். சதக நூல்களில் சதுரங்கம் ஆடினார். வெண்பா நூற்களில் விளையாடினார். திருக்குறளில் நல்ல தேர்ச்சி பெற்றார். நாலடியாரின் நயங்களை உணர்ந்தார்.

வெண்மையழி மோச பாசத்தை வேரறுத்துத்
தண்மைசெயும் சந்நிதியைச் சார்வதும் என்றேயோ

தேனினும் இனித்தது தெய்வத் திருப்புகழ். அதைப் பாடிப் பாடிப் பரவசம் ஆயினர். கந்தர் அனுபூதி கருத்தில் பதிந்தது. அவர் அதைப் பாடும் பொழுது, கல்லான மனமும் கரைந்துவிடும். அவர் பெயர் அண்ணாமலை.

கலைகளை உணர்ந்து கற்கக் கற்க, உலகம் உவர்த்தது. மாடு போல் பாடு படுவது. பணம் தேடுவது. பாவையரை மணப்பது. பாலரைப் பெறுவது. சஞ்சியை அதிகரித்து சங்கடப் படுவது.பாயும் நோயும் ஆவது. இறந்து போவது. சீ! இதுதானா வாழ்க்கை?

இந்தக் குட்டிச் சாத்தான் வாழ்க்கையில், மனிதப் பிறப்பின் அருமையை மறப்பது, பாவமே பாவம். உமிபோல்வது உடல். அதனுள் இருக்கும் அரிசியைப் போல்வது ஆன்மா. அரிசியின் சத்துப்போல் இருக்கிறான் ஆண்டவன். அரிசி முழுதும் அமலன் ஆட்சி. அவன் சொத்தான அரிசியைப் பாகப் படுத்துவோம். நியதியாக அவனுக்கே நிவேதிப்போம்: ஆம், அதுதான் முறை. அந்தமாகும் பிறப்பு, அதற்கென்றே அமைந்தது. மாபெரும் உலகம், எதனால் இதனை மறந்தது?

வாழ்விக்கும் சிந்தனை இப்படி வளர்ந்தது. கருவையின் அருகில் நிட்சேப நதி. அந்த ஆற்றங்கரையில் அமர்வார். அல்லது, ஊர்க்குக் கிழக்கே இருக்கிற குன்றின் மேல் இருப்பார். தன் உடல் உறுப்புகளை ஊன்றிப் பார்ப்பார். ஐயோ! மாண்டு மடிந்து இது, ஒரு நாள் மண்ணாய் விடுமே! எண்ணும் போதே கண்ணீர் வரும். பெருமூச்சு விடுவார். உள்ளம் கலந்தான். உயிர்க்குயிர் ஆனான். அவன் பெயர் பசுபதி. அவனே நமக்கு ஆதாரம். அவனை ஏத்துவோம், போற்றுவோம். இனி இதுவே நமக்கு உத்யோகம். அதுதான் புருஷ லட்சணம். மற்றவை நமக்குப் பொருளல்ல என்று மனம் கொண்டார்.

ஆலயத்தை வலம் வருவார். எத்தனை பிரதட்சிணம் ஆயிற்று என்று எண்ணுவது இல்லை. குட்டித் திருவாசகம் பாடி, நிறையும் வரை கோயிலைச் சுற்றிவிட்டு வருவார். பக்தர்கள் பஜனையில் கலந்து கொள்வார்.

அண்ணாமலை! பிழைக்கிற வழியைப் பார்! ஊர் சுற்றினால் குடும்பம் உருப்படாது தம்பீ! இது உறவினர் குரல்.

மெய்தான். வேலை தேடித்தான் திரிகிறேன். இப்போது அது தான் என்வேலை என்றார் அண்ணாமலை. அன்று முதல், வேலைத்

அசைந்தால் உலகசையும் என்னுமது மெய்யாமேல்
இசைந்தாட்டி என்னை யிழுத்தணைப்ப தென்றேயோ

தேடுவது எனக்கு வேலை என்று, வழுத்திக் கொண்டே யிருந்தது வாய். வர வர அது, வேல் வகுப்புப் பாராயணமாக வளர்ந்தது.

நாவில் வாணி நடமிடலானாள். உள்ளம் சுரந்தது. உணர்ச்சி மலர்ந்தது. வாயூறியது. சந்தச் சொற்கள், குபிர் குபீரென்று குதித்து வந்தன.

"மருவுற் றிணர்விரிந்து மதுபக் குலமுழங்க
மதுமொய்த் திழிகடம்ப வாரனை—விக
சிதசித்ர சிகியுற்ற வீரனை—எழில்
மாகநாகரு மாரி யாகிய மாதி னோடுகி ராத நாயகி
மருவப் புளகரும்பு தோளனை—எனை
அருமைப் பணிகொளும் தயாளனை
மருளற் றிடநினைந்து மனதிற் கனிசிறந்து
மதுரக் கனிவு வந்து கூடவே-பல
இதழுற் றிலகுசிந்து பாடவே-அலை
வாரி நீரினை வாரி மேல்வரு மாரி நேர்தரு மாமதாசல
வதனப் பன் இரண்டு தாளையே-நமக்கு
உதவப் பணிவமிந்த வேளையே"

என்று இப்படிப் பாடுவதே தொழிலானார்.

உளறி வழிகிறான். உதவாக்கரை என்று உறுத்தார் உறவினர். பைத்தியம் பிடித்தது பாவம் என்று பகர்ந்தவரும் பலர். அடேய்! என்னடா பாட்டு அது? என்று எதிர்ப்பை எழுப்பினர் சிலர்.

அண்ணாமலையின் சிறிய தகப்பனார், சிறந்த புலவர். அவர் பெயர் இராமசாமிக் கவிராயர். யாப்பிலக்கணத்தில் புலி. இலக்கியத்தில் மன்னர். அவர் சேற்றூர் சமஸ்தான வித்வான். ஒரு சமயம், சென்னிகுளத்திற்கு வந்தார். அண்ணாமலையின் போக்கை, அவர்க்கு உறவினர் அறிவித்தனர்.

இப்போது எங்கே அவன்?

ஆற்றங் கரையில்தான் இருப்பான் என்று பதில் வந்தது. விறு விறு என்று நடந்தார். நிட்சேப நதிக்கரையில்,

"வள்ளி மயில் அழகைப்
புள்ளி மயில் மேலிருந்து
அள்ளி அள்ளிப் பருகும்-அம்மான்—தெய்வப் பெம்மான்"

மாயா மயக்கறுத்து மன்னு தவம்காட்டிச்
சேயாம் எனை நின் தாள் சேர்ப்பதுவும் என்றேயோ

இப்பாட்டின் ஓசை, காற்றின் அலைகளில் கலந்து மிதந்தது. ஆம். அண்ணாமலை பாடும் பாடல்தான். களித்தார் கவிராயர். மெல்லப் பின்புறமாக வந்தார். நிழல் அசையக் கண்டு, திடுக்கிட்டு அண்ணாமலை திரும்பினார். வருபவர் சித்தப்பா என்று அறிந்தார். எழுந்தார். கைகுவித்துக் கும்பிட்டார்.

பேஷ் அண்ணாமலை! உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டேன். இயற்கையொடு கலந்து பாடுகிறாய். விருத்தியடைய, இன்னும் சில முயற்சி செய்ய வேண்டும்; என்னோடு வா என்று அழைத்துச் சென்றார்.

சிறிய தந்தையிடம், கருத்தோடு சில நூற்களைக் கற்றார். படித்தது போதும் என்று பட்டது. ஊர்க்குத் திரும்பினார். பரமனைப் பழையபடி பாடுவதே தொழிலானார்.

இப்படித் தந்தனத்தான் பாட்டு பாடிக் கொண்டிருந்தால், நடுத்தெருவில் நிற்க வேண்டியதுதான் என்று, குமுறிக் கொதித்தது குடும்பம். பல நாள், அதனால் பட்டினி கிடக்க நேர்ந்தது.

மீனாட்சிசுந்தரக் கவிராயர் என்று ஒருவர். அவர் விருத்தப் பாக்களை விரைந்து பாடுவார். அவர் அண்ணாமலையைச் சந்தித்தார். அளவளாவினார். இருவரும், நெருங்கிய நேசர் ஆயினர். இவர் ஒரு அடி பாடுவார்; அவர் ஓர் அடி பாடுவார். இப்படியே இருவரும், சந்தக் கவிகளில் நீந்தி மிதந்தனர். இருவர் பொழுது போக்கும் இப்படியே இருந்தது.

இரண்டாவது இரட்டைப் புலவர்கள் இவர்கள்; சோற்றுக்குத் தாளம்; பாடுவதில் குறையில்லை. சீச்சி என்று பழித்தார்கள் பலர்.

வறுமை தீர வழி என்ன? கவிராயரும் ரெட்டியாரும் கலந்து ஆலோசித்தனர். ஒரு முடிவிற்கு வந்தனர். கனத்தக்கிய செல்வர்களைக் கண்டனர். பாடு பாடு என்று அவர்கள் மேல் பாடினர். அதற்கு உரிய பயனை யடைந்தனர். அதனால் வறுமை யகன்றது. வாழ்க்கையில் வசதிகள் பெருகின. முன் இகழ்ந்த உறவினர், வருவாய் கண்டு வாழ்த்தினர். **இதுதான் உலகம்!**

குன்னூர் இராமசாமி முதலியார், அண்ணாமலை ரெட்டியார் கவிகளில் அதிகம் ஈடுபாடு காட்டினார். ரெட்டியார்க்கு இசையில் தேர்ச்சியில்லை; குரலும் சுமார். அவ்வளவுதான். முதலியார், சங்கீத

வண்டுறையும் கொன்றையாய்! வந்தென் அகந்தங்கக்
கண்டடியேன் இன்பக் களிபெறுவ தென்றேயோ

நிபுணர். இனிய குரல். ரெட்டியார் பாடல்களை, முதலியார் பாடுவார். கர்ணாமிர்தமா யிருக்கும்.

இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை முதலிய பதிகளில், ரெட்டியார் பாடல்கள் பெருகிப் பரவின. புலவர் காய்ச்சல் பொல்லாதது. அது கண்ணும் கருத்தும் இல்லாதது. அண்ணாமலையார் புகழ்கண்டு, புலவர்கள் பலர் பொருமினர்.

இலக்கணம் அறியான். இசைப்பயிற்சி யில்லை. ஆராய்ச்சிக்கும் அவனுக்கும் வெகுதூரம் என்று உறுமினர். புறம் கூறும் அவர்கள் முன், எதிர்ப்பை ரெட்டியார் எழுப்பிலர். அவர்கள் சொல்வதிலும், உண்மை யிருக்கிறது என்று உணர்ந்தார். இருக்கும் குறையைப் போக்க எண்ணினார்.

திருவாவடு துறைக்குச் சென்றார். சந்நிதானத்தை வணங்கினார். வித்தையில் தனக்கிருக்கும் ஆர்வத்தை விண்ணப்பித்தார். உடனே பிறந்தது உத்தரவு. பிரமஸ்ரீ. உ. வே. ஸ்வாமி நாதய்யர் அவர்களிடம் நன்னூல் பயின்றார்.

சந்நிதானத்தைக் காண வந்த ஸ்ரீமகா வைத்திய நாதையர் போன்ற பலரிடம், இராக தாளத்தில் ஞானம் பெற்றார். இப்படி இசையில் தேர்ச்சியுற்ற காலம், இரண்டு மாதங்களேதான்.

அதன் பின், சென்னிகுளம் திரும்பினார். யாப்பு அமைதியும், சந்தச் சுவையும் கொண்ட பாடல் பலவும் பாடினார். முன் இவரைக் குறை சொன்னவர்கள், வாக்கு நலம் கண்டு, இவர் ஒரு அருட்கவி யென்று அடங்கினர்.

ஊற்றுமலை ஜமீன்தார், இதயாலய மருதப்பதேவர். கலையுணர்வு கைவந்த அவர், அண்ணாமலையின் வாக்கு நயத்தில் நோக்கம் செலுத்தினார். அவரைத தம் சமஸ்தானப புலவர் ஆக்கினார்.

வரவர, மானுடரைப் பாடுவதில் மனம் கசந்தது. பகவானைப் பாடுவதே பிறவியின் பயன்; வறுமையைத் தவிர்க்க, இப்படி வழுக்கியது பாவம் என்று, வருக்கியது மனம்.

வீரை என்று ஒரு தலம். அங்கு மாதவப் பெருமாள் கோயில். அதற்குச் சில பிரபந்தம் பாடும் என்று வேண்டினர் சிலர். வீரை யந்தாதி, வீரைப் பிள்ளைத் தமிழ் இரண்டையும் விரைவில் பாடி உதவினார். வீரை யந்தாதியின் பாடல் ஒன்றைப் பார்க்கலாமா!

வேர்வையினில் முட்டையினில் வீழ்மண்ணில் கர்ப்பத்தில்
ஆர்வப் பிறப்பெடுக்கும் அநியாயம் தீராயோ

"தனமுந் திரியும் தரணியும் வேட்டுவிண் தாருஎன்று
மனமுந் திரியும் உதவப் பெறாத வரைப்புகழ்ந்தே
தினமுந் திரியும் நெஞ்சே! வீரை மாதவன் சேவடியை
• உனமுந் திரியும் இரியும் பவக்காடு; வைகுந்தம் உண்
டுனக்கே"

(பொழிப்புரை.) ஒரு முந்திரி அளவும் நன்மனம் இல்லாத கல் நெஞ்சரை, விண்ணாட்டுக் கற்பகமே என்று புகழ்ந்து, நாள்தோறும் அலையும் மனமே! வீரைப் பதி மாதவனைப் பாடு! உன்னும் முன்னே பிறவிக் காடு ஒழியும்; உனக்கு வைகுந்தம் கிட்டும்.)

என்ன அற்புதமாகப் பாடுகிறார்! இப்படியே யிருக்கும் ஒவ்வொரு பாட்டும். இவைகளுடன், சங்கர நாராயணர் கோயில் திரிபு அந்தாதியும், நவநீத கிருஷ்ணன் பிள்ளைத் தமிழும் பாடினர். அவைகள் நம் உள்ளத்தை அள்ளும்.

வித்தை விருத்திக்கு உதவிய திருவாவடு துறைக்குச் சென்றார். நன்றி செலுத்தினார். நீர் குலத்தில் ரெட்டி; அறிவில் இரட்டி என்று ஆசீர்வதித்தது சந்நிதானம். அங்கிருந்து ஊர்க்குத் திரும்பினார்.

ஊற்றுமலை ஜமீந்தார், முருக பக்தி முதிர்ந்தவர். இதய குமரனை இனிது பாடுக என்று, இவரை அவர் இடையிடை தூண்டுவார். புலவரிடம், துள்ளிக் குதித்து வரும் தோகை மயிலோன் பாடல். உணர்ந்து உருகும் ஜமீந்தார் உள்ளம்.

கழுகுமலைக்கு, நான் பால் காவடி எடுக்கப் போகிறேன். அப்போது என்பக்கத்தில் இருந்து, பரம குமரன் புகழ் நீர் பாடி வரவேண்டும் என்று, பல சொல்லி வேண்டினார் ஜமீந்தார்.

எனக்கு ஏன் இவ்வளவு உபசாரம் சொல்கிறீர்கள். கரும்பு தின்னக் கூலி வேண்டுமா? என் பிறவி யீடேற, வாய்த்தது இவ்வாய்ப்பு. ஆம். அதுதான் உண்மை என்றார் ரெட்டியார். நல்ல நாள் வந்தது. காவடி எடுத்தார் ஜமீந்தார். பல ஆயிரவர் சூழ்ந்து தொடர்ந்தனர். அரோஹரா குரல் வானை யளாவியது. புலவர், ஜமீந்தார் முன் போகிறார்; பக்தஜனப் பெருக்கமும், ஹரஹர ஒலியும், பாவலர் உள்ளத்தைப் பாகாய் உருக்கியது.

"தெரிதற் கரியமந்தி ரமதைத் தனது தந்தை
செவியிற் புகமொழிந்த வாயனை-யிள
ரவியிற் கதிசிறந்த காயனை-அதன்
தேவநாடு கெடாது நீடிய சேனைகாவல னுகவேவரு

ஒன்பதுவாய்ப் பொத்தல்பல உண்டான காயத்தைத்
தின்பதுவாம் பாழ்வினைகள் தீர்ப்பதுனக் காகாதோ

திறலுற்ற சிவகந்த நாதனை-விரி
மறைவைத் தொளிருகின்ற பாதனை"

என்று பரம கம்பீரமாகப் பாடுகிறார். குபுக் குபுக் என்று குதித்து வரும் பாடல் கேட்ட பக்தர்களிடம், புத்துணர்ச்சி பொங்கி வழிந்தது.

"தெள்ளுதமி ழுக்குதவு சீலன்-தமிழ்
செப்பண்ணு மலைக்குமனு கூலன்-வளர்
செழியப் புகழ்விளைத்த கழுகு மலைவளத்தைத்
தேனே சொல்லு வேனே
வீதிதொறும் ஆதிமறை வேதம்-சிவ
வேதியர்கள் ஓது சாம கீதம்-அதை
மின்னுமலர்க் காவதனில் துன்னுமடப் பூவையுடன்
விள்ளும் கிள்ளைப் புள்ளும்"

வேதியர்கள் ஓதும் வேதத்தை, கேட்டுப் பழகிய பழக்கத்தால், கிளிகளும் மைனாக்களும், திருப்பித் திருப்பி அதைச் சொல்லுமாம். இது கழுகுமலை அனுபவமாம்.

"அருணகிரி நாவிற் பழக்கம்-தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம்-பல
அடியார்கணம்மொழிபோதினில் அமராவதி யிமையோர்செவி
அடைக்கும் அண்டம் உடைக்கும்
கருணை முருகனைப் போற்றித்-தங்கக்
காவடி தோளின்மேல் ஏற்றிக்-கொழுங்
கனலேறிய மெழுகாய்வரு பலரேவரும் மிகவேகதி
காண்பார் இன்பம் பூண்பார்"

ஹா! அதோ பாருங்கள்! பாடுகிறார் பாவலர். சந்தத்தில் லயித்து, மெய்ம்மறந்து ஆடுகிறார்கள் பக்தர்கள். இப்படியே பாடியும் ஆடியும் பரவசத்தோடு, கழுகுமலை நோக்கிப் போகிறார்கள்.

"பொன்னுலவு சென்னிகுள நன்னகரண் ணாமலைதன்
புந்தியில் மகிழ்ந்து நித்தம் நின்றவன்-முந்தி
வெந்திறல் அரக்கர்களை வென்றவன்-மயில்
போல ஏனலின் மீதுலாவுதி ராதமாதுமுன் ஏகியே அடி
பூவையே! உனது தஞ்சம் என்றவன்-அவள்
ஈயும் மாவினையும் மென்று தின்றவன்"

என்ற பாடல் எழுந்ததும், மெய்ம்மறந்து, வெறும் வாயை மெல்லுகிறார்கள் பக்தர்கள்.

வித்தின்றித் தேக விளைவில்லை; என்றன்வினைக்
கொத்தழிநீ என்(று,) இதயம் கூவுவதும் ஓராயோ

"புள்ளிக் கலாபமயில் பாகன்-சக்தி
புதல்வ ஞனகன யோகன்-மலை
போலத் தான்இரண்டு கோலப் பன்னிரண்டு
வாகன் நல்வி வேகன்

என்ன இது? எல்லோரும் தம் தோள்களைக் குலுக்கி குலுக்கி எழுந்து குதிக்கிருர்களே! ஆம்.

"மரகத விகசித ஒளிதவழ் இருசிறை
மருவிய மயில்மிசை அனுதினம் உறைதரு
வாசன் பவ நாசன்
பரிபுர அணிகல கலவென ஒலிபுரி
பரிதியு தயமதில் அவிர்பறை மலர்நிகர்
பாதன் குக நாதன்"

எனும்போது, கலகல கலகல என்ற ஒரு இனிய ஒலி, எங்கிருந்தோ எழுவது போல இருக்கிறது அல்லவா! ஆவேசம் கொண்ட அன்பர்கள் பலர், அரோஹர குரல் கொடுத்து ஆடுகிருர்கள்.

"பந்த பாசம் இதை எந்த வேளையிலும்
பார்க்கும் போது தொல்லையே-எல்
லார்க்கும் ஆவது இல்லையே-ஒரு
பாரமே மேரு வில்லையே-கையில்
பற்று நாதன்மாது பெற்ற நீதன் மீது
பனுவல் சூடு வல்லையே"

பாவலர் எவர்க்கும், ஒரு அறிவிப்பைப் படிப்பதுபோல் இருக்கிறது இப்பகுதி.

இதோ வருகிருன் இளங்குமரன். அரிவையான என்னை வலிந்து அழைக்கிருனே! சேச்சே! ஓய் ஓய்! முருகா!

"ஆறுமுகவடி வேலவனே கலி
யாணமும் செய்யவில்லை—சற்றும்
அச்சம் இல்லாமலே, கைச்சர சத்துக்கு
அழைக்கின்ருய் என்ன தொல்லை?
மீறிய அன்பு இல்லாத பெண்ணொடே,
விளம்பாதே வீண் பேச்சு; சும்மா
வெள்ளைத் தனமாகத் துள்ளுகிருய் நெஞ்சில்
வெட்கம் எங்கே போச்சு

நீர்மேலே தீவைத்த நின்மலா! நின்றனது
சீர்மேலே என்சித்தம் சேர்ப்பதுனக் காகாதோ?

அம்புவிமிற்சிறு பெண்கள்மேல் உனக்கு
ஆசையே காணு தையா! நீர்
ஆக்கப் பொறுத்தாலும் ஆறப்பெறுதவர்
ஆகவே தோணுதையா!

பேஷ் பேஷ்! நாயக நாயகி பாவனையில் வரும் இந்தச் சிந்து, ஒரு சிறிதும் தாழாமல் உதவுகிறவன் உமைகுமரன் என்பதை உணர்த்துகிறது அல்லவா!

"பூமிமெச்சிடும் அண்ணமலைக் கோர்துணை ஆனவன்
மயில் வானவன் ஒரு கானவன்-தினைப்
புனத்தைக் காக்கும் வள்ளி
வனத்தைப் பார்க்க மெள்ளப் போனவன்
மூத்தம் கருகுதே! கண்ணீர் பெருகுதே! என்றன்
உச்சிக்கே றியமயல் பித்தம் கிறுகிறென்று வருகுதே!"

இந்தப் பாட்டில் உள்ள பொருளை அனுபவிக்கிறார்கள் பக்தர்கள். அவர்களுடைய ஆனந்தக் கண்ணீரே அதற்கு ஆதாரம்.

"செந்தூர் வளர்முருக நாதா!-அருளுதைய
செந்தாமரை திகழும் பாதா!"
"கந்தாசெய் யாதே பலவந்தம்-புதுமலரைக்
கசக்கியறி வார்களோ கந்தம்-சற்றும்
காதலிலா மல்சினந்தார் கையைவலி யப்பிடித்துக்
கசக்கிறு லாமோசுகா நந்தம்-எனக்கெங்கும்
கனவிலு மில்லையினித் தொந்தம்"

முருகன் மேல் மோகம் மூண்டவர்க்கு, எவர் மேலும், எதன் மேலும் இருக்காது பந்தம் எனும் கருத்து, எல்லோர்க்கும் தெய்வ வைராக்கியத்தை எழுப்புகிறது.

"பாளைவாய் கமுகில் வந்து வாளைபாய் வயல்சூழ் செந்தூர்
பாலனம் புரியவந்த புண்ணியா!-எந்த
காலையும் செய்கிறாய் முன்பின் எண்ணியா?
உன்னையும் விவாகம் இல்லா என்னையுமே அன்னை
கண்டால்,
ஒன்றும் சொல்லி டாளோ? அட பாவியே!-தின்று
தின்றிடுவேன் என்பாள் பச்சை காவியே!
சாருசேர் கரும்புருசி யாமிருந்தா லும்வேரோடு
தான்பறித்துத் தின்னுவது ஞாயமோ? முழு
ஆண்பிள்ளைக் கிதுதான் சம்ப்ர தாயமோ"

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறந்தொழியப்
பண்ணாதே தேவேநின் பார்வைக் கடைக்கலமே

உண்மைதான்; பிரகிருதி மாயை, ஆக்கையைத் தந்த அன்னை. காலம் நேரம் பாராது, எப்போதும் ஆன்ம நாயகியைக் கட்டித் தழுவ வருகிறான் கந்தன். அன்னை யறிந்தால், வாசனை யறியாது வசை பாடுவாளே என்று வருந்துகிறது மனம். மற்றொரு சமயம் வந்து மருவும் என்ற வேண்டுகை, காவடி தாங்கி வரும் ஜமீந்தார்க்கு,உயர்ந்த போதையை ஊட்டியது. அரோஹரா கோஷம் அதிர அதிர, கால் வலியே எவர்க்கும் தோன்றாதபடிச் செய்து விட்டது காவடிச் சிந்து.

"திவ்ய முகங்கள் ஆறுமே—கண்களில் கண்டால்—துன்பங்க ளெல்லாம்

காதவழி ஓடிப் போகுமே" என்று

ஆனந்தக் கண்ணீர் அருவிபோல் பெருக, பாடி வந்த பாவலர், அதன் மேலும் தாங்க முடியாமல்,

முருகா! முருகா! முருகா என்று கூவி மூர்ச்சித்தார்.

ஆ! காவடிச் சிந்து முடிந்தது. அயர்ச்சியே தோன்றவில்லை. கழுகுமலைக் கோயில் கோபுர வாயிலில்தான், மூர்ச்சித்து வீழ்ந்தார் கவிஞர்; அறிந்தவர் விரைந்தனர். பன்னீர் தெளித்தனர். மயில் பீலியால் விசிறினர்: தெளிவு பிறந்தது. எழுந்தார் கவிஞர்.

ஜமீன்தார், கவிஞரை ஆலிங்கனம் செய்து கொண்டார். சிந்து பாடிய செல்வரே! விசாகன் உம் நாவில் இருந்து விளையாடுகிறான். உம்மால் நானும் கிருதார்த்தன் ஆயினேன் என்று கொண்டாடினார்.

காவடி செலுத்தினர், பிரார்த்தனை நிறைவேறிய பின், ஊர்க்குத் திரும்பினர் யாவரும்.

காவடிச் சிந்தை மனனம் பண்ணிய, ஊற்றுமலை ஜமீந்தார் உள்ளத்தில், உவகை துள்ளியது. சேதுபதி முதலிய செல்வர் பலர், பக்தர் அண்ணாமலை ரெட்டியாரைப் பலபடப் பாராட்டினர்.

முப்பது ஆண்டுகள்வரை, இப்படி முருகனை வழிபட்டார் ரெட்டியார்.

ஊற்றுமலைத் தனிப்பாடல் திரட்டு எனும் தம் புகழுடலைப் பூவுலகில் நிறுத்தினார். அவர் ஆன்மா, பூத யாக்கையில் இருந்து புறப்பட்டது. ஆறுபடை வீடுடையான் திருவடி நிழலில் ஆறுதல் அடைந்தது; ஆநந்தம் கொண்டது!

வாழ்க முருகனடியவர்!

ஓம்.

முன்புரத்தைப் புன்னகையால் மோசித்தா யென்கின்றார்
என்புரத்தில் ஞானத்தீ ஏற்றுவதும் என்றேயோ

உள்ளது ஒன்றே

(சிவானந்த விஜயலக்ஷ்மி)

[சென்ற மாதம், 'வாழ்க்கை யாது' என ஆராய்ந்தோம். வாழ்க்கைக்கு ஆதாரமான பரம்பொருளின் வடிவத்தைச் சற்றே சிந்திப்போம்.]

'உள்ளது ஒன்றே.' அதுவே நாம் காணும் அனைத்தையும் தாங்குகிறது. அனைத்தையும் ஆக்கி, அளித்து, ஐந்தொழில் புரிகிறது. 'உள்ள' பொருள் பரம்பொருள், உண்மைப் பொருள். 'உள்ளது' என்றால் சத்தியமானது, நித்தியமானது, சாஸ்வதமானது. அது தோன்றுவதில்லை, எனவே மறைவதுமில்லை. 'சத்தியமான' வஸ்துவை, சத்துப் பொருள் என்கிறோம். அது ஒன்றே உலகத்தில் சத்தியமானது. ஏனைய அனைத்தும் அசத்தியப் பொருட்கள் தாம். ஆனால் அசத்தியத்தில் சத்தியம் தங்குவது ஏன்? 'அசத்தியத்தை சத்தியமாக்க' என்கிறது உபநிஷதம். (அஸ்தோமா ஸத் கமய.)

உள்ளது ஒன்றே. அது நாம ரூபமற்று, வர்ண வடிவமற்று, காலதேசமற்று, எங்கும் நிறைந்து, எதனிலும் உறைந்து, அனைத்தையும் கடந்து, ஆனால் அனைத்தையும் வியாபித்து விளங்குகிறது. எனவே அப்பொருளைக் 'கடவுள்' (கட+உள்) என்கிறோம். அதனைக் கண்ணால் காண முடியவில்லை; ஆனால் கண்டவர்கள் உண்டு. அதன் சொற்களைக் காதால் கேட்க முடியவில்லை, ஆனால் கேட்டவர்கள் உண்டு. அதனைத் தொட்டு அறிய முடியவில்லை; ஆனால் தொட்டு, கட்டி இன்புற்றவர்கள் உண்டு. அவர்கள் அப்பொருளை எங்கு கண்டனர், எப்படிக் கண்டனர், எதனால் கண்டனர்? உள்ளத்தில் கண்டனர், உள் ஆராய்ச்சியால் கண்டனர், உணர்ச்சியால் கண்டனர். கண்ட பின்,

---

வானவரும் மோனிகளும் வாழ்த்தும் திருவருளில்
யானமரும் வண்ணஞ்செய் யாமளையை ஆள்வானே

'உளன் கண்டாய், நன்னெஞ்சே, உத்தமன் என்றும் உளன் கண்டாய், உள்ளுவார் உள்ளத்தில் உளன் கண்டாய்' என்று, தங்கள் அநுபவத்தை அகிலமெல்லாம் அறியும்படி வெளியிட்டனர். உள்ளத்தில் உறையும் உத்தமனை உள் முகமாக நோக்கிடில், உள்ளபடி காணலாம். தன்னில் அவனைக் காணில், தரணியெங்கும் அவனைக் காணக் கூடும்.

உத்தமமான குணங்களுக்கு உறைவிடம் அப்பொருள். உலகமெங்கும் வியாபித்து நிற்கும் உயர் பொருள். தீயினில் வெம்மையாய், புனலினில் தண்மையாய், காற்றினில் அசைவாய், இரவியில் ஒளியாய், மனிதனில் மனிதனாய், மிருகத்தில் மிருகமாய், சொல்லில் ஒளியாய், மலரில் மணமாய், பண்ணில் சுவையாய், பற்பல பாங்கில் பரிணமிக்கிறது, அப் பரம்பொருள். உலகின் செயல்களனைத்தும் இயற்கையின் செயல். இங்குக் காணுமனைத்தும் இயற்கையால் நடத்தப்படுகிறது. 'இயற்கையின் செயலே, இறைவனின் செயல் என்று பேசுவது அறிவின்மை' என்று சிலர் வாதாடுகின்றனர். ஆனால் எங்கும் நிறைந்த இறைவனை, இயற்கை திரையிட முடியாததால், அவன் பெருமை வெளியே பீறிட்டு வருகிறது. சத்தியம் அதன் உடல். ஒளி அதன் நிழல். எனவே அதனைச் சார்ந்து நிற்பவர்கள் சத்திய சீலர்களாய் விளங்குவார்கள். சத்தியத்தைச் சார்பவர்களைச் சாரும் இறைவனின் திரு ஒளியும், அவர்களைச் சார்ந்து, அவர்களுக்கும் நிழலாக விளங்கும்.

'உள்ளது ஒன்று' என்று உணராத மனிதன் மனிதனாகமாட்டான். மனிதன் உடலால் மிருகத்துடன் தொடர்பு கொண்டவன். அவன் உள்ளத்தால் பரம்பொருளுடன் தொடர்பு கொள்ளாது இருப்பானாகில், ஒன்றுக்கும் உதவாத, கீழ்த்தரமான ஜந்துவாகிறான். நாம் வாழும் உலகுக்கு ஆதாரமான ஒரு பொருள் இருந்தே தீரவேண்டும். அவ்வாதாரப் பொருளுக்கு, காரண வஸ்து ஒன்று இருக்

கல்லைக் கனியாக்கிக் கனியிற் சுவைகாட்டும்
செல்வத் துரையெனை நீ சேர்த்தணைத்தா லாகாதோ

தாக வேண்டும். காரண வஸ்துவுக்கு அறிவும் இருக்க வேண்டும். அவ்வறிவு மேலான அறிவாக இருந்தாலன்றி அறிவுள்ள வஸ்துக்களை அது படைக்க முடியாது அன்றோ! அம் மேலான அறிவையே நாம் பரம்பொருள், கடவுள் என்றும், இங்குள்ள ஜீவராசிகள் அனைத்தையும் ஆளும் இறைவன் என்றும் அழைக்கிறோம். அது என்றும் உறங்குவதில்லை; எப்போதும் விழித்திருக்கும். நம் உள்ளத்தில் எழும்பும் எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் அஃது குறித்துக் கொண்டே வருகிறது. எங்கிருந்து அவ்வாறு செய்கிறது? நம் உள்ளிருந்து செய்கிறது; செய்கைகளனைத்தையும் அப் பொருள் கண்காணித்து வருகிறது என்று உணர்ந்து, செயல்களனைத்தையும் அதனைக் காண்பதற்காகச் செய்வோம். அது எண்ணிய பாங்கில் எண்ணவும், அதன் இச்சைப்படி வாழவும், அப் பொருளை அன்பு செய்யவும் தலைப்படுவோமாகில், விரைவில் அப்பொருளுடன் நாமும் கூடி வாழலாம்.

பண்டைய காலத்தில் அப் பரம்பொருளுக்கு வடிவம் ஒன்று கொடுத்தனர். செங்கோல் ஒன்றில் ஒரு கண்ணை வரைந்து, அஃதே இறைவனின் வடிவம் என்று ஏத்தித் தொழுதனர். இதன் பொருள் என்ன? உலகனைத்தையும் அப்பொருள் ஆட்சி செய்கிறது. அதன் ஆளுகைக்கு உட்படாத பொருள் ஏதுமில்லை. அப்பொருள் கண்காணிக்காவிடில், கரையற்ற கடல் பொங்கி வராது நிற்குமா? வானத்திலுள்ள எண்ணற்ற அண்டங்கள் வீழாதிருக்குமா? ஒரே பாங்கில் சூரியனும், சந்திரனும், வாயுவும், வருணனும் இயங்கி, காலத்திற்கேற்ப வெய்யிலும், மழையும், பனியும், காற்றும் மாறி மாறி வருமா? அப் பரம்பொருளின் கோபமே பூமிஅதிர்ச்சியிலும், சூறுவளிக் காற்றிலும், பலத்த மழையிலும், கொடூர வெய்யிலிலும் வெளிப்படுகிறது. செங்கோல் செய்யும் தொழில் இது. அதில் வரையப்பட்

பார்க்கின்றார் நின்றன்சீர் பாடுகின்றார் மெய்யடியார்
ஆர்க்கின்றேன் உண்டுறங்கி ஆஹா இஃதென்னேயோ

டுள்ள கண், இறைவன் அனைத்துயிரிலும், அகிலமனைத்தி லும் தங்கி, அவர்களின் சொல், செயல், சிந்தைக்கு சாக்ஷி யாய் விளங்குகிறான் என்பதை எடுத்துக் காட்டுகிறது.

உள்ள பொருளின் வடிவம் யாது? ஓருருவமும், ஒரு பெயரும் இல்லாத அப் பரம்பொருளுக்கு, மக்களின் மன பரிபாகத்திற் கேற்ப, உருவமும் பெயரும் கொடுக்கப்படு கிறது. ஆனால், உலகின் எந்த மூலையில் சென்றாலும் கட வுளை ஏற்றுக் கொள்ளாத மக்களைக் காண்பதரிது. கொடிய விலங்குகளினிடையே வாழும் மனிதனாய் இருப்பினும், சூரிய ஒளி வீசாத துருவப் பிரதேசத்தில் வாழ்பவனாயி னும், அவனுக்கும் ஒரு தெய்வம் உண்டு. காரணம் என்ன? மனிதனின் அறிவோடு ஒன்றிய தத்துவமாக இறைவன் இலங்குகிறான். துன்பமும், துயரமும் நம்மைத் தாக்கி, துணையேதும் இல்லாது தவிக்கும் காலத்தில் நமக் குத் தோன்றாத் துணையாகி வந்து உதவ, இறைவனைத் தவிர எப்பொருளும் இல்லை. உள்ளத்தின் ஆழத்திலிருந்து வரும் பெருமூச்சு, 'கடவுளே' என்றுதான் அழைக்கும்.

அனைத்திலும் நிறைந்து, அனைத்தையும் கடந்து, மனத் திலும் உறைந்து, மறைந்து விளங்கும் பரம்பொருள். நித் தியத்தன்மையும், மெய்யான அறிவும், அழியாத ஆனந்த மும் அதன் குணங்களாகும். அதன் வடிவத்தில் மனிதன் அமைக்கப்பட்டிருக்கிறான் என்று பெருமக்கள் பகர்வர். எனவே, அதன் குணங்களான அமரத்தன்மையும், அறி வும், ஆனந்தமும்(சத்-சித்-ஆனந்தம்)மனிதன் பெற்று இன் புற வேண்டும்: பஞ்சபூதங்களால் ஆன இவ்வுடலில் ஒட் டிக் கொண்டிருக்கும் ஆத்மாவையும், அதன் ஆதாரமான 'பரமாத்மா'வையும் ஒன்று என உணர்ந்து, அவ்வுணர்வில் ஒன்றிவிடும் காலத்தில், அற்ப மனிதன் அமரனாகிறான்; சிற் றறிவு பேரறிவாகிறது; சிற்றின்பம் பேரின்பமாகிறது. மனி தன் உள்ளத்தில் ஒளிரும் அறிவு ஒன்றுதான் அவனையும்

பொய்யகன்ற சன்மார்க்கம் போற்றிடுவேன்; என்போதம்
கையகன்று போகக் கனிந்தருள்வ தென்றேயோ

மிருகத்தையும் வேறுபடுத்துகிறது. அந்த அறிவில் ஒளிர்பவன் ஆண்டவன். அவனை அன்பால் காண வேண்டும். ஆனால் அவ்வொளி நமக்குப் புலப்படாதபடி அறியாமை அதனை மறைக்கிறது. அறியாமையைக் களைந்தால் அகத்தில் விளங்கும் பேரொளி பிரகாசிக்கும். அதனைக் கண்ட மனிதன் அமரனாகிறான். "தமஸோமா ஜோதிர் கமய, ம்ருத்யோர்மா அம்ருதம் கமய". இதுவே நமது லக்ஷியம். எனவே, நம் பற்றனைத்தும் பரமனைப் பற்றியதாக இருக்கட்டும். நம் செயல்களின் முடிவு இறைவனை இன்புறுத்துவதாக அமையட்டும். இறைவன் பொருட்டே அன்பு செய்பவர்களாக இருப்போம். நம்மை ஆளும் ஆண்டவனுக்கு அடிமைகளாக வாழ்ந்து, அவனுடைய குணங்களான சத்தியம், அன்பு, கருணை, தருமம், தயை, ஈகை, இரக்கம், ஞானம், அஹிம்ஸை முதலியவற்றைக் கடைப்பிடிப்போமாக.

'ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்' என்றனர் மேலோர். ஒன்றே பல வடிவானது. வேறுபட்டுப் பலவாகத் தோன்றுகிறது. ஆனால், அனைத்தும் அதன் வடிவங்களே. ஏகம்—அநேகமாயிற்று. பொன் ஒன்று, அணிகள் பல; மண் ஒன்று, பாண்டம் பல; சூரியன் ஒன்று, கிரணம் பல; செடி ஒன்று, மலர்கள் பல. வடிவம் பலவான போதிலும், வஸ்துவுக்கு அழிவில்லை. அது 'அயனெனவாகி, அரனெனவாகி, அரியெனவாகி,' அவர்க்கும் மேலான வஸ்துவாக விளங்குகிறது. நித்தியமாய், நிர்மலமாய், நிஷ்களமாய், நிராகாரமாய், நிர்விகாரமாய், அகலமாய், ஸ்தாணுவாய் நிற்கிறது.

உள்ளது ஒரு உண்மைப் பொருள். அஃது ஆணல்ல, பெண்ணல்ல, அல்லது அலியுமாகாது. அதனைக் காணவும் முடியாது, காணவும் செய்யலாம். 'உண்டு' என்பவர்க்கு அது உண்மைப் பொருள். 'இல்லை'யென்பவர்க்கு எட்டாத

வெண்ணீறு பூசி விமலா எனக்கூவிக்
கண்ணீர் அபிஷேகம் காணுமெனைக் காணுமோ

வஸ்து. எந்த முறையில், எந்த வடிவில் வணங்குகிறோமோ அந்தப் பாங்கில் காக்ஷி கொடுக்கும். அன்பும், உண்மையும், பரிசுத்தமும் படைத்தவர்களுக்கு அஃது பக்கபலமாகிறது. 'நீயே துணை' என்று சரணாகதி அடைபவர்களுக்குத் தோன்றாத் துணையாய்த் துலங்குகிறது. நீயும் நானும் வேறல்ல என்பவர்க்கு, அத்வைத ஆனந்தம் அளிக்கிறது. எல்லாம் உன் உருவம் என்பவர்க்கு அனைத்துமாகக் காக்ஷி கொடுக்கிறது. பயனை வேண்டுபவர்க்குக் கேட்டதை மாத்திரம் கொடுக்கிறது. நீயே வேண்டும் என்று பிரார்த்திப்பவர்க்குத் தன்னையே தருகிறது. சர்வ லோக ஆதாரமான பொருள் கிட்டுவதைக் காட்டிலும் சிறந்த பேறும் உண்டோ!

உயிரின் ஒளி முகத்தில் பிரதிபலிக்கிறது. உயிரற்ற உடல் சவமாகிறது. அதுபோல, இறைவனின் ஒளி உலகத்தைப் பிரகாசப் படுத்துகிறது. அவனில்லையேல் உலகம் உறங்கிவிடும். இறைவன் அருகில் செல்லச் செல்ல, நமக்குள்ள இதர பொருட்களின் பெருமையும், மதிப்பும், குறைந்து போகும். உயரச் செல்லும் விமானத்திலிருந்து நோக்குகையில், கீழே காணும் நகரங்களும் மாளிகைகளும் விளையாட்டு பொம்மைகள்போல் தென்படுவதுபோல, இறைவனை நோக்கி நாம் உயர, உயர, உலகமும் அதன் பொருட்களும் வெறும் பொம்மைகளாகக் காக்ஷி கொடுக்கும். கல்லூரி மாணவன் பொம்மைகளைத் தேடுவதில்லை. அதுபோல நாமும் இப் பொம்மைகளைக் கண்டு மயங்க மாட்டோம்.

வாழ்க்கை எனும் மாளிகைக்கு ஆதாரமானவன் இறைவன். அவனை 'இல்லை' என்று மறுப்பவர்கள் மிகவும் பயங்கரமானவர்கள். ஆண்டவன் கொடுத்துள்ள சுகங்களை அனுபவித்துக்கொண்டு, அவன் தந்த அறிவால் அவனை இல்லை என்று நாஸ்திக வாதம் பேசுபவர் நஞ்சுக்கு ஒப்பானவர்

என்புருகி யுள்ளமுதல் இனிய கரணமெலாம்
அன்பு பெருகுநெறி அத்தா அருளுதியோ

கள். எனவே, அவர்களுடன் தொடர்பு கொள்வது தவறு. அவர்களை நினைப்பதும் தீது. ஆண்டவனுக்கு எதிரியாக இருப்பவன், மனிதனுக்குத் தோழனாக முடியுமா? இத்தகைய தீயாரிடமிருந்து தப்புவது எப்படி? நாமே கடவுளாக வேண்டும். அதாவது, இறைவனுடைய புனிதத் தன்மை, அன்பு, கருணை, தயை, ஞானம் இவற்றிற்கு நாம் உறைவிடமாக வேண்டும்.

ஏமாற்றமும், துக்கமும், துன்பமும், துயரமும் அலை வீசும் வாழ்க்கைக் கடலில் அலைப்புண்டு, நாம் ஆண்டவன் எனும் கரையை நாடுகிறோம். அது சமயம் ஆண்டவன் நமக்குத் தெய்வமாகவும், தந்தையாகவும், அன்னையாகவும், ஆசானாகவும், தோழனாகவும் தோன்றி உதவுகிறான். பின்னர், இதுகாறும் வாழ்க்கையில் வீசிய புயல், நம்மை அழிவு, சாக்காடு, எனும் பாறையில் மோதச் செய்து, வாழ்க்கைப் படகை உடைக்க வரவில்லை ; ஆண்டவனின் அணைப்பிலே நம்மைச் சேர்க்க வந்தது என்று உணர்கிறோம்.

உண்மைப் பொருளை எங்குக் காண்பது? கல்லாலும் செங்கல்லாலும் கட்டப்பட்ட கோயிலுள், கல்லிலும் செம்பிலுமான சிலையில், ஆண்டவன் தங்குவதில்லை. அக்கோயிலில், சிலையில் ஆண்டவன் உள்ளான் என்று நாம் கொள்ளும் நம்பிக்கையில் ஆண்டவன் உள்ளான். ஆனால், நடமாடும் கோயிலாக உயிர்களனைத்தையும் ஆக்கிக்கொண்டு, நம் கண் முன் இறைவன் உலாவுகிறான் என்பதை நாம் உணரவேண்டும். கண்முன் தோன்றும் இறைவனைப் பணியாது, அவனுக்குத் தொண்டு புரியாது, அவனை நம்மிலிருந்து வேறானவன் எனக் கருதி, கண்ணிற்குப் புலப்படாத அவனைக் கல்லில் மாத்திரம் வழிபடுவதில் பயனுண்டோ! நற்குண நலன்களும், நன்முறை வாழ்க்கையும் வாழாதவன் 'இறைவன்' 'கடவுள்' என்று பேசுவதால்தான் உலகில் நாஸ்திகம் தோன்றியது. கடவுள் என்று பேசாத போதிலும், அவ

புண்ணியம் செய்தோருன் பொன்னடியில் தோய்சரிதை
எண்ணியெணி என்னிதயம் எழும்புதிலை ஓராயோ

னுக்குப் ப்ரீதியான செயல்களில் ஈடுபடுபவர் மேன்மக்க ளாவார்.

இருவகை மக்கள் இறைவனுக்கு இன்பம் தருகின்ற னர். ஒப்பு, உவமையற்ற அவ்வொண் பொருளை அறிந்து, அவனுக்குத் தொண்டு புரிபவர் ஒரு சாரார். இறைவனை இன்னும் காணாததால், அவனைக் காணப் பேரவாக் கொண்டு உழைப்பவர் மறுசாரார். நம்மில் பெரும்பாலோர் இரண்டாவது வகையைச் சார்ந்தவரே. எனவே, அதிசுக மாக வாழும் சமயம் ஆண்டவன்பால் நன்றி கொண்டும், நடுத்தரமான காலத்தில் திருப்தியுடனும், கஷ்ட காலத் தில் ஆண்டவனைச் சரணமடைந்தும், இருள் நிறைந்த காலத்தில் இறைவனிடம் நம்பிக்கையும், எக்காலத்திலும் இறைவனுக்கும், அவன் வகுத்த தருமத்திற்கும் பணிந் தும், கட்டுப்பட்டும் வாழ்க்கை நடத்துவோமாகில், அமைதியும், இன்பமும் பெற்று ஆனந்தமடைவோம் என் பதில் ஐயமில்லை!

பெரிய புராணச் சித்திர விளக்கம்:—

மதுரைமாநகர் புகுதல்

(கி. வா. ஜ.)

திருவீழிமிழலையில் இறைவன் திருவருளால் காசுபெற் றுப் பஞ்சம் நீங்குமளவும் தங்கியிருந்த சம்பந்தப் பெரு மான் திருநாவுக்கரசரோடு அத்தலத்தினின்றும் நீங்கி இடையிலே பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு திரு மறைக்காட்டை வந்து அடைந்தனர். அத்தலத்திற் புகுந்து திருவீதியில் வரும்போது அவ்வூரினர் எதிர்கொண்டழைத் தனர். எங்கும் 'ஹர ஹர ஹர ஹர' என்ற முழக்கம் நிரம் பியது. திருக்கோயில் வாயிலுக்கு வந்து நின்ற போது அவ் வாயிற்கதவு அடைத்திருப்பதைக் கண்டு விசா ரித்தபோது, "முன் ஒரு காலத்தில் வேதங்கள் இங்கே

நாவிலுன் றமிழ் நவிற்றுகின்ற அன்பர்மொழிப்
பாவில் பயின்றேனைப் பார்த்தருளல் என்றேயோ.

வந்து பூசித்துச் செல்லுகையில் இக்கதவைத் திருக்காப்புச் செய்து போயின. அப்பால் இதைத் திறக்க முயன்ற போது இயலவில்லை" என்ற செய்தியை ஞானசம்பந்தர் உணர்ந்தார்.

அவர் அப்பர் சுவாமிகளை நோக்கி, "இந்தத் திருவாயிலைத் திறந்து இதன் வழியாகவே சென்று நாம் இறைவனைத் தரிசனம் செய்துகொள்ள வேண்டும். ஆகவே திருக்காப்பு நீங்கும்படி ஒரு திருப்பதிகம் பாடியருளுங்கள்" என்று கூறினார். அது கேட்ட சொல்வேந்தர், "உங்கள் திருவுள்ளம் இதுவாகில் அப்படியே செய்வேன்" என்று உடனே ஒரு திருப்பதிகத்தை இசைத்தருளினார். பதினொரு பாசுரம் ஆனபிறகு திருக்கதவம் திறந்துகொண்டது. உடனே யாவரும் அந்தத் திருவாயிலின் வழியே கோயிலினுட் புகுந்து இறைவனைத் தரிசித்து இன்புற்றார்கள்.

கோயிலுக்கு வெளியே வந்தபோது அப்பர் சுவாமிகள் திருஞானசம்பந்தப் பெருமானை நோக்கி, "திறந்தகதவு மீட்டும் அடைக்கவும் திறக்கவும் வேண்டும்; ஆதலில் ,தேவரீர் இதை அடைக்கப்பாடி அருளவேண்டும் என்று கூற அவ்வாறே, "சதுரம் மறைதான்" என்று தொடங்கும் திருப்பதிகத்தை அருள் செய்தார்.

"இதுநன் கிறைவைத் தருள்செய்க எனக்குன்
கதவந் திருக்காப் புக்கொள்ளுங் கருத்தாலே"

என்று தம் விருப்பத்தை முதற் பாட்டிலே குறிப்பித் தருளினார். முதற் பாசுரம் பாடியவுடனே கதவு அடைத்துக் கொண்டது. யாவரும் திருவருட் சிறப்பை எண்ணி ஹரவொலி செய்து ஆர்த்தனர். சம்பந்தப் பிள்ளையார் பதிகத்தை நிறைவேற்றினார்.

மறைக்காட்டிலிருந்து திருவாய்மூர் சென்று போற்றி மீண்டும் மறைக்காட்டை வந்தடைந்த இரண்டு நாயன்மாரும் அத்தலத்தில் சிலகாலம் தங்கியிருந்தார்கள்.

அக்காலத்தில் பாண்டி நாட்டையாண்ட நெடுமாறன் என்ற பாண்டிய அரசன் சமண சமயத்தைத் தழுவிச் சமணருடைய அறிவுரையைக் கேட்டு ஒழுகி வந்தான்.

மாற்றறியாப் பொன்னே! உன் மாபெருங் கோயில்களை
ஏற்றியென் உள்ளத்தில் இன்புறுத்தல் என்றேயோ

மதுரை மூதூரிலும் பாண்டி நாட்டுப் பகுதிகளிலும் சமணர்களுடைய ஆதிக்கம் அதிகமாயிற்று. அருகர்களில் ஆசாரியார்களும் பிறரும் மதுரையைச் சூழ்ந்த எட்டு மலைகளில் குகைகளிலும் மடங்களிலும் வாழ்ந்து வரலாயினர். அவர்கள் எண்ணாயிரம் பேர் இருந்தனர்.

பாண்டி மன்னனுடைய தேவியாகிய மங்கையர்க்கரசியாரும் மந்திரியாகிய குலச்சிறையாரும் சைவ நெறியை விடாது கடைப்பிடித்து ஒழுகினர். அவ்விருவரும் பாண்டியன் அறியாதவாறு சைவ ஒழுக்கத்தில் ஈடுபட்டு வாழ்ந்தனர். சோமசுந்தரப் பெருமானும் அங்கயற்கண்ணி அம்மையும் எழுந்தருளியிருக்கும் மதுரைமா நகரிலும், பாண்டி நாட்டிலும் சைவம் மங்கிச் சமணம் விஞ்சியிருப்பதற்கு வருந்தி, "இறைவனே, இந்த நிலை மாறுவது எப்போது?" என்று இறைஞ்சி ஏங்கி நின்றார்கள். அப்போது ஞான சம்பந்தப் பெருமான் திருமறைக்காட்டில் திருக்கதவம் அடைக்கப்பாடி எழுந்தருளி யிருப்பதைக் கேள்வியுற்றுச் சிலரை அப்பெருமானிடம் விடுத்துப் பாண்டிநாட்டு நிலைமையையும் தம் கருத்தையும் தெரிவித்து, மதுரைக்கு எழுந்தருள வேண்டுமென்று தங்கள் சார்பில் விண்ணப்பம் செய்து கொள்ளும்படி செய்தார்கள். அவர்கள் அவ்வாறே வேதாரணியம்சென்று ஞானசம்பந்தரைத்தரிசித்து வணங்கி மங்கையர்க்கரசியாரும் குலச்சிறையாரும் கூறியவற்றைத் தெரிவித்தார்கள். உடன் இருந்த தொண்டர்கள் அனைவரும், "மதுரைக்குத் தேவரீர் எழுந்தருளிச் சமணர்களை வாதில்வென்று மீட்டும் அங்கே சைவநெறி வழங்கும்படி செய்தருளவேண்டும்" என்று வேண்டினர். இறைவன் திருவருள் இது என்ற எண்ணத்தால், பாண்டிநாடு செல்லத் திருவுள்ளம் கொண்டார் சம்பந்தர்.

அதனை அறிந்த நாவுக்கரசர், "சமணர்கள் செய்யும் வஞ்சனைக்கு ஓர் எல்லையே இல்லை. இப்போது கிரகநிலையும் நன்றாக இல்லை. ஆகவே எழுந்தருள வேண்டாம்" என்று கூறினார். அது கேட்ட சம்பந்தர், "இறைவன் கழலையே பாடும் நமக்குத் தீங்கு ஒன்றும் வராது. அடியார்களுக்கு

உள்ளூறி என்றன் உணர்வூறி நாவிருந்த
அள்ளூறி வாழ்த்த அடியேற் கருளுதியோ

ஒன்பது கோள்களும் எப்போதும் நன்மையே செய்யும்" என்று கூறி, "வேயுறு தோளிபங்கன்" என்ற திருப்பதிகத்தை அருளிச் செய்தார். அப்பதிகம் கோள்களினுல் வரும் இன்னல்களை ஒழிக்கும் ஆற்றலுடையதாதலின், கோளறு திருப்பதிகம் என்று வழங்கும் அப்பதிகத்தால் அடியார்களுக்கு நவக்கிரகங்களும் நல்லனவாக இருக்குமென்றும், மக்களை நலியும் யாவுமே நல்லனவாக அமையுமென்றும் புலப்பட வைத்தார். அது கேட்ட அப்பர் பாண்டிநாட்டுக்குச் சம்பந்தர் செல்வதற்கு உடன்பட்டார்.

அப்பால் ஞானபோனகராகிய பிள்ளையார் நாவுக்கரசரைச் சோழநாட்டிலே இருக்கும்படி சொல்லி விட்டுப் பாண்டி நாட்டை நோக்கிப் புறப்பட்டார். இடையிலே உள்ள திரு அகத்தியான்பள்ளி முதலிய சோழ நாட்டுத் திருப்பதிகளைத் தரிசித்துக்கொண்டு பாண்டி நாட்டின் எல்லையை அடைந்தார். பிறகு பாண்டிநாட்டில் பிரான் மலை என வழங்கும் கொடுங்குன்றத்தை வணங்கிப் பாடி மதுரையை நெருங்கினுர்.

ஞானசம்பந்தர் இவ்வாறு வந்து கொண்டிருந்தபோது மதுரையிலும் அதனையடுத்த இடங்களிலும் உள்ள அமணர்கள் பல தீக்கனுக்களையும் துர்நிமித்தங்களையும் கண்டு அஞ்சினர்.

சம்பந்தப் பிரான் மதுரையை நோக்கி எழுந்தருளி வருவதைப் பரிசனங்களால் உணர்ந்த குலச் சிறையார், அந்தச் செய்தியைப் பாண்டிமாதேவியாகிய மங்கயர்க்கரசியாருக்குத் தெரிவிக்க, அப்பிராட்டியார், "நீங்கள் போய் அவரை எதிர்கொண்டு சென்று அழைத்து வாருங்கள்" என்றுர், அப்படியே அமைச்சர் புறப்பட அரசியார், "ஆலவாய்ப் பெருமானைக் கும்பிட வேண்டும்" என்று அரசனிடம் சொல்லிவிட்டுத் திருக்கோயில் சென்று ஞானப் பிள்ளையாரை எதிர்நோக்கி நின்றுர்.

குலச் சிறையார் சம்பந்தப் பெருமானை எதிர்சென்று வணங்கித் துதித்து மங்கையர்க்கரசியார் தம்மை வரவேற்

வானுய் வியாபித்து மதியாகித் தண்மைதரு
தேனுகி யென்னைத் தெளிவுறுத்தல் என்றேயோ ?

கும்படி சொன்னதைத் தெரிவித்தார். அது கேட்டு மகிழ்ந்த பெருமான், "மதுரைத் திருக்கோயில் எங்கிருக்கிறது?" என்று கேட்க, குலச்சிறையார் சோலைகளினிடையே தோன்றும் திருவாலவாய்க் கோபுரத்தைக் காட்டினார். உடனே பிள்ளையார் கீழ் விழுந்து பணிந்து எழுந்து உணர்ச்சி பொங்க, "இதுதான் ஆலவாயா?" என்று வியப்புத் தோன்ற, "மங்கையர்க்கரசி" என்ற முதலையுடைய திருப்பதிகம் பாடியருளினார். அப்பதிகத்தில் ஒரு பாட்டில் மங்கையர்க்கரசியாரையும் அடுத்த பாட்டில் குலச்சிறையாரையும் வைத்து அவர்கள் வணங்கும் ஆலவாய் இதுவோ என்ற கருத்தை அமைத்துப் பாடினார்.

மந்திரியும் பிள்ளையாரும் பிறரும் திருவாலவாய்த் திருக்கோயிலை நோக்கிச் சென்றனர். திருக்கோபுரத்தை வணங்கியெழுந்த பிள்ளையார் உடம்பெலாம் புளகம் போர்ப்பக் கண்ணீர் வார உட்புகுந்தார். புகும்போதே, "நீலமாமிடற் றால வாயிலான்" எனவரும் திருப்பதிகம் பாடினார்.

இறைவனைத் தரிசிக்கும் ஆர்வத்தோடு பிள்ளையார் உள்ளே எழுந்தருளித் தரிசித்துக்கொண்டு திரும்ப, அங்கே நின்றிருந்த மங்கையர்க்கரசியார் எதிர் செல்லாமல் ஒதுங்கி தம் தலைமேல் கைகளைக் குவித்துக்கொண்டு நின்றார். உடனே குலச்சிறையார், "இவரே சோழன் மகளாகிய மங்கையர்க்கரசியார்" என்று பணிந்துகாட்ட, அப்பெருமாட்டியார் சம்பந்தர் காலில் விழுந்து வணங்கினார். எழுந்து வாய்குழறக் கண்கள் நீர்சொரிய, "யானும் என்பதியும் செய்த நற்றவம் என்னே!" என்று கூறினார். "சுற்றும் பர சமயம் சூழ்ந்திருக்க இடையே சைவநெறிவழாமல் தொண்டுபுரியும் உங்களைக் காணவந்தோம்" என்று பிள்ளையார் அருளினார். பிறகு அரசியார்க்கு விடை கொடுத்தனுப்பிவிட்டுக் குலச்சிறையார் ஒரு திருமடத்தைக் காட்ட, அங்கே தம்முடைய தொண்டர் குழாத்தோடு தங்கியருளினார்.

மாண்புடைய வானோரை வாழ்விக்க நஞ்சுண்ட
ஆண்மை யரசே! அடியனைவா என்னையோ

அருணகிரியும் ஐம்பூதத்தலங்களும்

(S. T. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.)

சிதம்பரம் :

தகராகாசத் தனித்தலமான சிதம்பரத்தில் மூர்த்தியான முதல்வன் சிறப்பையும், அவன் எழுந்தருளுதற்கமைந்த கீர்த்தி மிக்க கோயில் சிறப்பையும் ஒருவாறு கூறினோம். இனி நம் அருணை அண்ணல் இத்தலத்தைத் தரிசித்த தன்மையைச் சிறிது சாற்றுவோம்.

தீர்த்தம் :

ஆலய வழிபாடு செய்யப் புகுவோர் அனைவரும் அகமும் புறமும் தூயராய்ச் செல்ல வேண்டும். அகந்தூய்மை வாய்மையாற் காணப்படும். சத்திய ஞான மெய்த் தொண்டராய்ச் செல்லவேண்டும் என்பது அகந்தூய்மையால் அடையத் தக்கது. புறந்தூய்மை நீரான் அமையும். புற அழுக்கையும் அகத்தின் மல அழுக்கையும் போக்கித் தூய்மை செய்பவன் ஆண்டவனே. அதனால்தான் அவனுக்குத் தீர்த்தன் என்று ஒரு பேர் உண்டு. பார்க்குமிடமெல்லாம் பரமனையே காணும் பாக்கியம் பெற்ற பக்தர்கட்கு உண்ணும் உணவும், பருகும் நீரும், தின்னும் வெற்றிலையும், ஆறும் மடுவும், இயற்கை எழிலும் எல்லாம் இறைவன் காட்சியே தருவனவாகும். சுழலும் பிறவித் துயரில் ஆழ்த்தும் மல மாசுகளைக் கழுவும் மாதேவன் தீர்த்தன் ஆவது போல, அவனது ஆலயத்தமையும் குளம் முதலிய நீர்நிலைகளும் தீர்த்தங்கள் எனப்படும். 'வாவியெல்லாம் தீர்த்தம்' என்ற பட்டினப் பிள்ளையாரின் பாடலும் காண்க. எனவே, மூர்த்தியும் தலமும் போலவே தீர்த்தமும் சிறப்பாக ஓதப்படும். அவ்வாறே சிதம்பரத்தில் அமைந்துள்ள தீர்த்தம், "ஆர்த்த பிறவித் துயர் கெட நாம்

சீர்த்தியார் மெய்ம்மைச் சிவனடியார் கூட்டத்தில்
ஆர்த்தியாய் யானடிமை செய்ய அருளுதியோ

ஆர்த்தாடும் தீர்த்தன்" பெயரான் இயங்கும் சிவகங்கை யாகும்.

சிவகங்கை :

இத் தீர்த்தம் கோயிலில் ஈசான்ய மூலை என்னும் வடகிழக்கில் கூத்தப் பெருமான் திருமன்றத்திற்கு வடக்கே உள்ளது. இங்கு ஈசனே இத் தீர்த்தமாய் நின்றான். இதில் மூழ்குவார் உடல் தூய்மை, உள்ளத் தூய்மையும் பெற்று முத்தி சேர்வர்.

"ஈசன் சிவகங்கை வடிவமா யின்றான்—ஈரேழ் உலகத்தில்
எத் தீர்த்தத்தும் உத்தமதீர்த்தம்"
"மன்றம் சேர உத்தரத்துளது......
எழிற் சிவகங்கை யார்க்கும் முத்தியை நல்கு தீர்த்தம்"
(சிதம்பர புராணம்)
"திருந்தும் ஈசானதிக்கில் சிவகங்கை என்னும் தீர்த்தம்
இருந்திடும்; மூழ்குவார்க்கு அஃது ஈந்திடும் முத்தி"
(சிதம்பரசபாநாத புராணம்)

இந்தப் புனித தடாகத்தை நமது திருப்புகழ் நாவலர் தரிசித்தார்; இதில் மூழ்கினார்; செந்தமிழ் நாட்டைச் சேர்ந்தது சிதம்பரம் என்பதும், அதிலுள்ள இத்தடாகம் சிவஞானம் பாலிக்கும் சிறப்பையும் கூட்டி, இதனைச் 'செந்தமிழ் ஞான தடாகம்' என்று வாயார வாழ்த்தலுற்றார்.

செந்தமிழ் ஞான தடாக மென்சிவ
கங்கை யளாவும் மகா சிதம்பர
திண் சபை மேவு ம(ன்)ன சவுந்தர—தம்பிரானே"

கற்பக விநாயகர் :

சிவகங்கையில் நீராடிய சீர்பாத தொண்டராகிய நம் திருப்புகழ் ஆசிரியர், தலவிநாயகரை நமக்கு அறிமுகப் படுத்தித் தரிசிக்கச் செய்கிறார். விநாயகர் எழுந்தருளி யுள்ள இடம் கோயிலின் மேற்குக் கோபுரவாசல். அங்கே வந்து நின்று "புலியூர் புகழ் சொற்பதப் பொருளாகும் அணி கோபுரக் கற்பக விநாயகரை" அஞ்சலி செய்கிறார். அவரது அருள்மிக்க துதிக்கையும், இளமை தங்கிய சோதி உருவும் ஆனை முகமும் கண்டார். திரும்பிப் பார்க்கு

காண்டற் கரிதாம் கருணைத் திருவுருவை
ஈண்டஎன் உள்ளத் திருத்துகநீ எந்தாயே

மளவில் அவரது தம்பியான அண்ணலும் காட்சியளிக்கிருர். உடனே

' கைத் தருண சோதி அத்தி முகவேத
கற்பக சகோதரப்—பெருமாள்காண்''
''ஆதி கற்பக விநாயகற்கு பிற
கான பொற் சரணு''
''புலியூரினில் மேலைக் கோபுர வாசலில் மேவிய
பெருமாளே''

என்ற திருப்புகழ்ப் பாசுரங்கள் வாய்வழி மலர்கின்றன. ''கற்பகம் எனவினை கடிதேகும்'' ஆதலால், கற்பக விநாயகரை வழிபாடு செய்து வடக்குத் தெற்குக் கோபுரம் முதலிய ஏனைய கோபுரங்களையும் வணங்கினுர்.

''சீர் புலியூர் பரமாகிய வடக்குக் கோபுர வாசலில் மேவிய—
தம்பிரானே''
''செம்பொற் பிலியுலாம் மயில்மாமிசை
பக்கத்தே குறமாதொடு சீர்பெற
தெற்குக் கோபுர வாசலில் மேவிய பெருமாளே''
''பொன் புலிக்குள் தேவர்கள் நாயக
திருச் சிற்றம்பலத்துட் கோபுர மேவிய—பெருமாளே''
''புலியூரில் வாழ் தெய்வயானை மானொடு நாலுகோபுர வாசல்
மேவிய—பெருமாளே''

பிறகு அம்பலக் கூத்தனுர் திருமுன் வந்து நிற்கிருர்.

கூத்தனுர் திருக்கூத்து :

கூத்தப் பெருமான் ஆடுந் திருவடியின் திருச் சிலம்போசை ''திமித்தத் திந்திமித் தத்தோ'' என்று ஒலிக்கிறது.

ஒலிமுனிவர் ''திமித்தத் திந்திமித் தத்தோவென ஆடிய சமர்த்தர்'' என்று பாடினுர். பக்கத்திலே சிவகாமவல்லி விளங்குவது கண்டார்.

''புலியூர் வாழு நாயகர்
மடமயில் மகிழ்வுற வாஞடர் கோவென
மலைமக ளுமைதரு வாழ்வே மனோகர''
''காதல் மாதவர் வலமேரும் சபை
நாதனுர் தமது இடமே வாழ் சிவகாம நாயகி''

காமியமாம் பக்தி கடையேன்கொள் ளாமல்நிஷ்
காமியமாம் வாழ்வில் கலந்திருப்பச் செய்யாயோ

என்றார். அப்போது அம்பலத்தாடும் ஐயர் அறுமுகச் சிவனாரே என்ற எண்ணம் எழுகிறது.

"மன்றுளாடும் - சிவசிவ அரகர தேவா நமோநம
தெரிசன பரகதி ஆனாய் நமோநம
திசையினும் பிசையினும் வாழ்வே நமோநம—செஞ்சொல்
சேரும்
திருதரு கலவி மணாளா நமோநம
திரிபுரமெரி செய்த கோவே நமோநம
செயசெய ஹரஹர தேவா சுராதிபர்—தம்பிரானே"
"கனக சபை மேவு எனது குருநாத
கருணை முருகேசப் பெருமாள்காண்"

என்று பாடினார். இத் தலப்பாட்டில் அருணகிரியார், தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம் ஆதல் பற்றி, "காண்" (தரிசிப்பாயாக)" என்றே பாடல் செய்தனர் போலும். மேலும், தாமின்புறுவது உலகின்புற எண்ணங்கொள்வர் உத்தமர். ஆதலின் தாம் தரிசித்துப் பெற்ற இன்பத்தினை நம்மில் ஒவ்வொருவரும் அடைய வேண்டுமென்று முன்னிலை ஒருமையாக தனித் தனியாக அழைத்துக் "காண்" என்று காட்டுவது ஈண்டுக் கருதத் தக்கது.

புலியூர் திருப்புகழ்

புலியூர் அமர்ந்தருளும் புனிதவேளைப் பல சிறப்பு மொழிகளால் அருணகிரியார் புகழ்கிறார். முருகவேளைப் பற்றி விசாரணை செய்வார்களாம் அடியார். அவர்கள் "ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? யார் உற்றார்? யார் அயலார்? ஏது அவனைப் பாடும் பரிசு?" என்றெல்லாம் வினவி வினவிக் களிப்பார்களாம். அப்படிப்பட்ட மெய்யன்பர்களையே கூடியிருந்து அவர்களுடன் அளவளாவும் மகிழ்ச்சியும் இன்பமும் கொள்ளும் ஆனந்தப் பரனும் ஆறுமுகன் என்பதை, "வினவும் அடியாரை மருவி விளையாடு விரகுரச மோகப் பெருமாள்காண்" என்கிறார்.

இத் தலம் ஞானகாயத் தலமாதலின், இங்குள்ள பெருமானும் 'சுத்த சிவஞானப் பொருளே' ஆவர். இத்தலத்

பூமியுளார் போற்றிப் புகழ்கின்ற பொன்னுருவச்
சாமிநின் தாள்மலரில் சார்ந்துறைவ தென்றேயோ

திருப்பதிகங்கள் ஞான தத்துவங்கள் பல நிரம்பிக் காட்டுவன.

ஐந்தெழுத் தருணிலை

தில்லைக் கூத்தர் திருநடனம் திருவைந்தெழுத்தை வெளிக்காட்டும். அந்தப் பஞ்சாக்கரத்தின் விளக்கத்தை "மதியமண்குண" என்ற அரிய பாடலில் கூறுகிருர். இதற்குத் தணிகைமணி வ. சு. செங்கல்வராய பிள்ளை M.A. அவர்கள் தந்துள்ள சிறந்த விளக்கவுரையை அன்பர்கள் தவருது படித்து மகிழ்வார்களாக.

பதஞ்சலியார் என்னும் பாம்புமுனி, தமது பதம் சலி யாமல் பார்த்திருக்கும் தலம் இது. எனவே அவர் அருளிய யோக நுட்பம் அனைத்தையும் மனத்துக்கொண்ட நமது சந்த முனிவர் "கட்டி முண்ட கரபாலி" என்ற பதிகத்தில் மிக அழகாக விளக்கம் தருகிருர்.

நெஞ்சறிவுறுத்தல் :

உலகிற்கு அறிவுரை கூறுவது ஒருவகை. அங்ஙனம் பிறரை நோக்கிக் கூறிடாமல் தன் மனத்துக்கே அமைதி பெற உரைப்பது ஒருவகை. நமது அருணகிரிப் பெருந் தகை தமது நெஞ்சிற்கே அமைவுரை கூறுகிருர்.

"நெஞ்சே! நீ வா. உய்வதற்கான உறுதி மொழிகள் சில உரைக்கின்றேன்; கேள். அருகில் வா; நானுரைக்கும் மொழியை ஒரு சிறிதும் தவருதே! மயிலேறும் பெருமான் தான் அடியார்க்கெல்லாம் அரசனுகும்; மனமாயை யற்ற மாஞான ஆனந்தக் குழந்தை. அவனை உள்ளபடியே தியானித்தால் உனக்கு சஞ்சலமேது? விண்ணுலகோடு உயர் சிவலோகமும் அளித்து மும்மலங்களை முழுது மறுக்க வல்ல ஞானப் பிரகாசன் அவனே. அவனே நமக்குச் சேம நிதி; கருதியது எல்லாம் தரும் கற்பகத்தரு. உயிருக்கு உறுதியும் அவனே. முழுமுதற் பொருளும் நீதி தழைக்கும் நியாயக்காரனும் அவனே. ஆதலால் அவனையே இடை விடாது தொழுது வருவாயாக"

மோதும் இடையூறு முன்னில்லா தோடிவிட
நாதா நீ என்னுளத்தில் நண்ணிளு லாகாதோ

"மனமே உனக் குறுதி புகல்வேன் எனக்கு அருகில்
வருவாய் உரைத்த மொழி—தவறாதே
மயில் வாகனக் கடவுள் அடியார் தமக்கரசு
மனமாயை யற்ற சுக—மதிபாலன்
நினைவேது உனக்கு? அமரர் சிவலோக மிட்டுமல
நிலை வேர் அறுக்கவல—பிரகாசன்
நிதிகா நமக்குறுதி அவரே பரப்பிரமம்
நிழலாளியைத் தொழுது—வருவாயே."

எனக் கூறுதலைக் கேட்டால் எந்த நெஞ்சந்தான் வஞ்சத்தை மறந்து குமரனடிக் கஞ்சத்தை எண்ணுதிருக்கக் கூடும்?

வற்புறுத்தி அருள்வேண்டல்

அடியார்க்கு ஆண்டவனிடத்தில் எப்போதும் தனியுரிமை உண்டு. 'அருளுக' என்று வேண்டுவர்; அருள் தரவில்லை எனில் 'அருளத்தான் வேண்டும்' என்று வற்புறுத்தி வரம் பெறுவர். சில சமயங்களில் நிந்தாஸ்துதி என்னும் வஞ்சகப் புகழ்ச்சி வகைகளையும் கையாளுவர்.

உன்னை நாடித் தொழாத பிறப்பு ஓயாதோ என்று எண்ணி நாயேன் அரற்றுகின்றேன். அப்பிறவிக்கு மூலம் வினை என்பதானால் அதனை மாற்றவேண்டுமென்று நான் கூறும் ஏழை மொழி அம்பலமேறாது. உமது திருவுளந்தான் என்னவோ? பல்வேறு வகையாக உனது திருவருட் சிறப்பையே புகழ்ந்து என்று மழியாத இன்பத் திருவடியாம் மலர்ப் பதத்தைத் தந்தருளுக என்று குழறிக் குழறித் தொண்டை கிழிய நிற்கும் எனக்கு, உன் திருவருள் மேம்பட வந்து மனக் கவலையை மாற்றியருளுக என்று உன்னையே தான் தொழுது வருகிறேன். அடியேன் முன் வந்தருளுக" என்கிறார் முதலில்.

முருகனடியே தஞ்சம் என்றும், நஞ்சனைய நெஞ்சுடைய வஞ்சகக் கோளர்களை நம்புதல் கொடிது என்றும் நினைந்து,அன்பு பெருக திருவடியினையே நாடி,'எங்களப்பா! சரணம்!' என்று கூறுதல் உன் திருச் செவிக்கேறலையோ! இருபுறத்திலும் உள்ள பெண்கள் மேல் பார்வையோ! அல்லது தகுதியற்ற இவனுக்கு அருளுதல் கண்டு பிறர்

வேதத்தை ஓதி விதியென்றாய் நான்முகனை
நாதாஎற் கோர்பணிநீ நல்குவதும் என்றேயோ

யாது சொல்வரோ என்று அச்சமா? உன் சொல்லைத் தட்டி மிஞ்சுவார் எவரேனுமுண்டோ? உனக்கே காக்கக் கடனன்றோ? எனக்கு வேறு யார் துணை? ஆதலின் இமையவர் துணையாய் இருந்தது போல என் முன்னும் தோன்றி வந்து அருளுக என்று பின்னும் வேண்டுகிற விதத்தை உன்னுக.

"நஞ்சினைப் போலு மன வஞ்சகக் கோளர்களை
நம்புதல் தீதென நினைந்து நாயேன்
நண்புகப் பாதமதில் அன்புறத் தேடியுனை
நங்களப்பா! சரணம்—என்று கூறல்
உன் செவிக் கேறலை கொல்! பெண்கள் மேல் பார்வையை
கொல்!
உன் சொலைத் தாழ்வு செய்து—மிஞ்சுவாரார்?
உன்றனக்கே பரமம்; என்தனக் கார்துணைவர்
உம்பருக் காவதினின் வந்து தோணும்"

முடிவுரை: இதுகாறும் கூறியவற்றால் சிதம்பரம் மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றானும் உயர்ந்தது. தகராகாசத் தனிப்பதி; ஞானமன்று; அங்குள்ள நடமாடும் நம்பன் செம்பொனம்பலந் தரிசிக்கச் சென்ற நம் அருணகிரியார் நாலு கோபுரங்களையும் தொழுது, சிவகங்கையான ஞான தடாகத்தில் நீராடி, அத்திமுகவேத கற்பக விநாயகர் கழலிணை வணங்கி, இனியமுது புலி பாதனுடன் அரவுசத கோடி இருடியர் புகழ் ஞானப் பெருமானை அம்பலத்தாடுமவர் தம்பிரானாகவும், சிவகாமவல்லி மகிழ்வுற பாகங் கொண்ட சிவனாரை அறுமுகச் சிவமாய் வழிபட்டு அருட்டிறம் வியந்து அற்புதக் கவிமழை பொழிந்த பின், நெஞ்சிற் கமைவுரையாகவும, உலகிற்கு அறிவுரையாகவும், மந்திர நுட்பம், ஞான நடன ரகசியம் ஆதியன உரைத்தனர் என்க. அவர் அருள் பெறும் அவாவுடைய நாமும் திருப்புகழோன் காட்டிய நன்னெறி கடைபிடித்து ஐம்புலமகற்றும் ஐம்பூதத் தலங்களையும், ஒவ்வொன்றின் உள்ளுறைப் பொருளையும் உணர்ந்து வழிபட்டு அயரா அன்பின் அவன்கழல் பெறுவோமாக.

வாதமிலா ஞான வழிகாட்டி வஞ்சம்பொய்த்
தீதகல என்னைத் திருவடியில் வைப்பாயோ

"மன்னுக தில்லை; வளர்க நம் பக்தர்கள்; வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து புவனியெலாம்
விளக்க
அன்னநடை மடவாள் உமைகோன் அடியோமுக்கு அருள்
புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தர்க்குப் பல்லாண்டு
கூறுதுமே
(சேந்தனார்)

"தீர்த்தம் என்பது சிவகங்கையே!
ஏத்தருந்தலம் எழிற் புலியூரே!
மூர்த்தி அம்பலக் கூத்தனது உருவே!
"வாழி திருமன்றம் கண்ட மலர்க்கண்கள்
வாழி பெருமான் புகழ் கேட்ட வார்செவிகள்
வாழி அவனை வணங்கு முடிச்சென்னி
வாழி யவன் சீர்பாடும் வாய்" (குமரகுருபரர்)

(தொடரும்)

திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ.)

தேனுந்து முக்கனிகள் பால்செங்க ருப்பிளநீர்
சீரும்ப ழித்தசிவம் அருளூறத்
தீதும்பி டித்தவினை யேதும்பொ டித்துவிழ
சீவன்சி வச்சொருபம் எனதேறி
நானென்ப தற்றுயிரொ டேனென்ப தற்றுவெளி
நாதம்ப ரப்பிரம ஒளிமீதே
ஞானம்சு ரப்பமகிழ் ஆநந்த சித்தியொடெ
நாளும்க ளிக்கபதம் அருள்வாயே;
வானந்த ழைக்கஅடி யேனும்செ ழிக்கஅயன்
மாலும்பி ழைக்கஅலை விடமாள
வாரும்க ரத்தனெமை யாளும்த கப்பன்மழு
மானின்க ரத்தனருள் முருகோனே!

உலகுய்யக் கங்கை உயர்முடிமேல் தாங்குமுனைக்
கலகமிலா நெஞ்சத்தால் காண்பதுவும் என்றேயோ

தானந்த னத்ததன ஞவண்டு சுற்றிமது
தானுண்க டப்பமலர் அணிமார்பா!
தானம்கு றித்துஎமை யாளும்தி ருக்கயிலை
சாலும்கு றத்திமகிழ் பெருமாளே!

(வானம் என்பதுமுதல் முருகோனே என்பதுவரை.)

(பதவுரை). வானம் தழைக்க - வானுலக தேவர்கள் வாழவும்; அடியேனும் செழிக்க - அடியவனை யானும் வளம் அடையவும்; அயன் மாலும் பிழைக்க - பிரமனொடு திருமாலும் பிழைக்கவும்; அலை விடம் மாள - அலைகளையுடைய கடலில் எழுந்த ஆலகாலம் (தன்) ஆற்றல் கெடவும்; வாரும் கரத்தன் - (அதை அப்படியே) வாரி யெடுத்த திருக்கரத்தனும்; மழு மானின் கரத்தன் - மழுவும் மானும் ஏந்திய திருக்கரத்தனும் ஆன; எமை ஆளும் தகப்பன் அருள் முருகோனே - எம்மை ஆளாக்கிக் கொள்ளும் பரம பிதாவான சிவனார் அருளிய இளம்பரிபூரண!;

(தானந்த என்பது முதல் அணிமார்பா என்பது வரை.)

தானம் தனத்த தனஞ -, (எனும் ரீங்காரத்துடன்;) வண்டு சுற்றி மது தான் உண் கடப்ப மலர் அணி மார்பா – வண்டுகள் மொய்த்து (மகரந்தத்தில் உள்ள) தேனைப் பருகும் கடப்ப மலர் மாலை யணிந்த திருமார்பை உடையவனே!;

(மதுதான் உண் என்பதில் உள்ள தான் என்பது - அசைநிலை; மதுவையே பருகும் எனும் பொருளில் தேற்றமுமாம்.)

(தானம் என்பது முதல் பெருமாளே என்பது வரை.)

தானம் குறித்து - பரிபாக இடத்தைத் திருவுளங் கொண்டு; எமை ஆளும் திருக்கயிலை - எம்மை ஆண்டு கொள்ளும் திருக்கயிலாயத்தில், சாலும் குறத்தி மகிழ் பெருமாளே - நிறைவுளத்துடன் நடமாடும் குறவர் குல வள்ளி யம்மையைப் பார்த்து மகிழும் பெருமையிற் சிறந்த பெருமானே!;

(தேனுந்து என்பது முதல் தேறி என்பதுவரை.)

தேன் உந்து முக்கனிகள் - தேனும், தேனைப் புறங் கண்ட (வாழை மா பலா எனும்) முக்கனிகளும்; பால்—, செங் கருப்பு - செங்கரும்புச் சாறும்; இளநீர் சீரும் பழித்த சிவம் அருள் ஊற - இளநீர் முதலியவற்றின் சிறந்த சுவைகளைத் தாழ்வு படுத்திய சிவத்தின் அருள் சுவை, ஊற்றுப் பெருக்குப் போல் உதயமாக;

பாம்பா பரண பாதிமதிச் செஞ்சடையாய்
ஓம்பா தெனைவிடுதல் ஓஹோ கொடிதையா

தீதும் பிடித்த வினை ஏதும் பொடித்து விழ - (நற் செயல்களொடு) தீமைகளையும் இறுகப் பற்றிய இருவினைகளும், அடியொடு சாம்பராகி அழிய; சிவன் சிவச் சொருபம்—, என தேறி - என்று தெளிவு பெற்று;

(நான் என்பது முதல் அருள்வாயே என்பது வரை.)

நான் என்பது அற்று - (நான்) நான் எனும் அகங்காரம் முழுதும் கெட்டு; உயிரொடு ஊன் என்பது அற்று - உயிர்ப் பற்றுடன் தேகாபிமானம் ஒழிந்து;

வெளி நாதம் - (ஞான) ஆகாய நாதத்துடன்; பரப்பிரம ஒளிமீதே - மெய்ப் பொருள் பேரொளி நிலையத்தையே; ஞானம் சுரப்ப - (உணரும்) பதிஞானம் ஊற்றெடுக்க; மகிழ் ஆநந்த சித்தியொடு - மகிழும் பேரின்ப சித்தியுடன்; எந்நாளும் களிக்க - என்றும் களி கூர்ந்திருக்க; பதம் அருள்வாயே - (உமது) திருவடி தரிசனம் அருள்வீராக, (எ-று).

விரிவுரை

கடலை வானவர் கடைந்தனர். கடை கயிறான வாசுகி, விடத்தைக் கக்கியது. திசை யெலாம் பரவியது தீச்சுவாலை. அது பொறுத ஆன்மாக்கள், அலறி அழுதனர்.

அது கண்டு திருவுளம் இரங்கி, விமலன் உடனே வெளிப்பட்டான். எழுந்த விடத்தை வாரி எடுத்தான். உண்டான்; நீல விடம் கண்டத்தில் நின்றது. அன்று ஏகாதசி. இதனால் என்ன நேருமோ என்று, துவாதசி வரை அஞ்சி யிருந்தனர் அமரர்.

திரயோதசி புண்ணிய காலம் தோன்றியது. இன்பம் அடைந்த தர்ம தேவதை, ரிஷப உருவில் *எதிர் நின்றது. நலம் சிறந்த அதன் கொம்புகளின் நடுவில், சாந்தி நிருத்தம் செய்தான் சங்கரன். அமுதம் பருகி, இறவா நிலை எய்தினர் இமையவர். தகுதி பெற்ற வானுலகம், இப்படித் தழைத்தது. அண்டத்து வரலாறு ஆன இதனை, ஊன்றிப் பிண்டத்தில் உணர்ந்து சிறந்து, வையகத்தான் யானும் வளங் கொண்டேன். படைப்பும் காப்பும் செய்ய, பிரமனும் மாலும் பிழைத்தனர். இவ்வளவும் நேர,

---

காலன் தனையுதைத்துக் கான்முளையைக் காத்தாய்நின்
சீலமுணர்ந் தென்னுள்ளம் சிவசிவஎன் கின்றதுவே

"பாரோடும் விண்ணுடர் பறந்தோட, புரந்தனூர் பதிவிட்
[டோட,
தேரோடும் கதிரோட, விதியோட, மதியோட,
[திருமால்மேனி
காரோடத் தொடர்ந் தோட"

எழுந்த கடல் விடத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்தி, அதை வாரி எடுத்த திருக்கரத்து வள்ளல் சிவபிரான் என்று, பெருக்கமான வரலாற்றைச் சுருக்கமான அடிகளில் சொல்லும் பெருமிதம், அருணகிரி முனிவரிடம் இயல்பாகவே அமைந்துளது. மற்று,

அந்தகாசுரன், கயாசுரன் முதலினோரை அடக்கி, உம்பர் தழைக்க உதவிய கரம் ஒன்று; அடியேன் செழிக்க, அபய வரதம் காட்டிய கரம் இரண்டு; பிரமனும் திருமாலும் பிழைக்க, அருமைத் தம் திருமேனிக்கு அணிகலன் ஆகும்படி, அவர்களை எடுத்து அணிந்த கரம் இரண்டு; அகிலத்தை அழிக்க எழுந்த விஷ ஆற்றலை, அடக்கிய கரம் ஒன்று; அதை வாரி எடுத்த கரம் ஒன்று; பயங்கர மழுவும் மானும் பற்றிய கரம் இரண்டு; முருகற்கு அருளிய கரம் ஒன்று; ஆக பத்துத் திருக்கரப் பரமன் அருளிய முருகோனே! எனவரும் சிவனார் திருக்கர வகுப்பு, ஐந்தாம் ஆறும் அடிகளில் இருக்கின்றது என்றும் பொருள் கொண்டு, மகிழ்கிறது நம் மனம்.

இப் பொருளில் வாரும் என்பது - நீளும் எனும் பொருளில் நின்றது; "வார்தல் போதல் ஒழுகல் மூன்றும், நேர்வும் நெடுமை யும் செய்யும் பொருள" என்பது தொல்காப்பியம்.

தழைக்க வாரும்; செழிக்க வாரும்; பிழைக்க வாரும்; விடம் மாள வாரும் கரத்தன் என்று கூட்டிப் பொருள் கொள்ளப் பெற்ற இங்கிலை, கடைநிலை விளக்கு எனும் இலக்கணத்தில் அடங்கும்.

இங்ஙனம் பல வகையில் அருள்வோனை, 'எமது தகப்பன்' எனும் அருமையே அருமை.

சிவபோகம் அருள்பவன் சிவகுமாரன். கடப்ப மாலையை, அதற்கு உரிய அடையாளமாகக் காட்டுகிறான். (கடம் - உடல்). கடத்திலிருந்து கடத்தி, வனப்புடைய முருகன் திருவடி நிழலில் வாழ வைக்கின்ற காதலின், கனிவு தரும் அதன் பெயர் கடப்ப மலர் எனப் பெற்றது.

நல்லார் உரைத்தவழி நான்விழைதல் கண்டிருந்தும்
வல்லாளா! நீஎன்னை வலிந்தீர்த்தல் செய்திலையே

'உருள்பூந் தண்தார் புரளும் மார்பினன்' என்ற திருமுருகாற்றுப்படையும்,

"நால்ங்க வேதத்தின் பொருளோனே!
நானென்று மார்தட்டும் பெருமாளே!
மார்தங்கு தாரைத்தந் தருள்வாயே!"

என, அருணையர் வேறொரு இடத்தில் செய்துள விண்ணப்பத்தையும் அறிந்துளம்.

பண் சுமந்த தெய்வ வேத தேவதைகள், குறுகிய வண்டுகளின் உருவம் கொண்டன. முன்னேறி, கடப்ப மாலையில் மொய்த்தன; இனிய நாதம் எழுப்பின. பயனை பேரின்பத் தேனைப் பருகின எனும் செய்தி,

"தானந்த னத்ததன ஞுவண்டு சுற்றிமது
தானுண் கடப்பமலர் அணிமார்பா"

என்பதில் வெளியாயது.

இன்ப துன்பத்தைச் சமமாக எண்ணினர். ஆணவ அழுக்கு அகலும் பருவம் வந்துளது. அருமையுடைய இவர்களை, இனி ஆட்கொள்ள வேண்டியதுதான் என்று, இடையறாது நடமாடி அறிகிறார், அருங் கயிலையில் இருக்கும் வள்ளி அம்மையார். அத்தேவியின் பெருங் கருணையை நோக்கி, பெரு மகிழ்ச்சி யடைகிறான் ஆறுமுகப் பெருமான்; இவைகளை உணர்த்தும் இறுதியடியில் தோய்ந்த நம் உள்ளம், துள்ளுகிறது அல்லவா!

தேனும், முக்கனிகளும், பாலும், கருப்பஞ் சாறும், இளநீரும் சுவையுடையன; அவைகளைக் கொண்டுதான் ஆண்டவனை அபிஷேகிக்கின்றார் அடியார்கள். அதன் பயனாக, ஊனெலாம், தோலெலாம், ஊறும் உதிரமெலாம், என்பெலாம், என்பினுள் துளையெலாம் பாய்ந்து, உயிர்க்குப் பயனளிக்கும் திருவருள் இன்பம், வளர்ந்து பூரித்து வருகிறது. பேறான அதன்முன், பிற சுவையெலாம் பிற்பட்டுப் போகும். இதனை, 'சீரும் பழித்த சிவம் அருளூற' என்பதில் பெற வைத்தார்.

"பன்னில் ஊறும் பழத்திலும் இன்சுவை
என்னில் ஊறி எனக்கே களிதரும்."

மாந்துகின்றார் பொன்னருளை மன்னேயுன் தாள் விழைவார்
சார்ந்தே அவர்சார்பால் சாந்திபெறச் செய்யாயோ

"கனியினும் கட்டி பட்ட கரும்பினும்
பனிமலர்க் குழல் பாவை நல்லாரினும்
தனிமுடிகவித் தாளும் அரசினும்
இனியன் தன்னடைந் தார்க்(கு)இடை மருதனே"

எனும் தமிழ்மறை, இங்கு நம் நினைவிலுறுகிறது. இந்த அனுபவத்தை,

"தேனாய் இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்"

என்று உள்ளம் உருகி, மணிவாசகனார் ஓதுவதும் உணர்வோம்.

ஊற்றுப்போல் இன்பத் திருவருள் உதயமாக, கன்ம வினை அனைத்தும், அப்போதே கால் சாயும். இதை,

'அருளுற–தீதும் பிடித்த வினை,
ஏதும் பொடித்து விழ'

என்பதில் பெற வைத்தார்.

முற்பிறப்பில் செய்த நல்வினையும் தீவினையும், இப் பிறப்பில் தடைபடாமல் வந்து, இன்ப துன்பங்களைத் தருகின்றன. தீதும் என்ற உம்மையால், (நற்செயலொடு) தீச் செயலும் கொண்ட சழக்குடைய இருவினையும் சாம்பராக என்று பொருள் கொள்ளப் பெற்றது.

அருள் பெருக வினை அழியும். அதன்பின், தத்துவமசி என்ற உபதேச சாதனை. (தத்—அது; துவம்—நீ; அசி—ஆகிறாய்). சாதனை இறுதியில், அஹம் பிரம்மாஸ்மி என்னும் அனுபவம் கைவல்யம் ஆகும். (அஹம்—நான்; பிரமம்—பிரம்மம்; அஸ்மி—ஆகிறேன்.) அங்கிலையை,

'சீவன் சிவச்சொருபம் என தேறி'

என்று அறிவிக்கப் பெற்றது. சாதனை வளர வளர, மஹா வாக்யத்தில் உள்ள அஹம் என்பது மறையும்.

அது மறையவே, (பிராணன் எனும்) உயிர், ஊன் மயமான உடல் இவைகளின் அபிமானம் போம். இவைகள்,

---

எங்கே யிருந்தாலும் ஏதுவிழைந் திட்டாலும்
அங்கே அருள்கின்ற அத்தனை ஆளாயோ

' நானென்ப தற்று, உயிரொடு
ஊன்என்பது அற்று '

என்பதில் வெளியாகின்றன.

வெறும் ஓசை ஒலிகட்கு இடம் பூத ஆகாயம். இதற்குள் சூக்கும ஆகாயம்; அதற்குள் குண ஆகாயம்; அதற்கும் உள்ளே கஞ்சுக ஆகாயம் அதனுள் இருக்கின்றது காரண ஆகாயம்; காரணத்துள் பிரணவ ஆகாயம்.

நான் எனும் முனைப்பழிந்து, தேகாபிமானம் தேய்ந்த நிலையில், வெளியாகும் இதற்குச் சிதாகாயம், ஞான ஆகாயம் என்றும் பெயர் உண்டு.

இந்த ஆகாயத்தில், அபரநாதத்திற்கு அயலான பரநாதம் கேட்கும்; பரப்பிரம சோதி எனும் மெய்ப் பொருள் பேரொளியும், வித்தகமாகி அதனுடன் விளையாடும்.

பூதாகாயத்தில் மின்னலும் இடியும் தோன்றி மறையும். அந்த இடியும் மின்னல்களும், ஞானகாயத்தில் பரப்பிரம ஜோதியும், பரநாதமும், என்றும் நிலையாகி இப்படித்தான் இருக்கும் என்னும் நினைவை, நம்முள் எழுப்புகின்றன.

பரநாதம் கேட்டு, பரஞ்சோதியைப் பார்த்த அளவில், உயர்ந்த சிவஞானம் உதிக்கும்; வர வர அந்த ஞானம் வளரும். பேருன சிவஞானம் பெருகப் பெருக, அணிமா மகிமா லகிமா முதலிய எண்வகைச் சித்திகட்கு அயலான, சிறந்த பேரின்பம் சித்திக்கும்.

முருகா! மேற் சொன்ன ஒவ்வொன்றும் முறையே நிறைவேறி, இறுதியில் உரைத்த ஆநந்த சித்தியில், என்றும் ஒன்றி யின்புற்றிருக்க, உனது திருவடி தரிசனம் உதவி யருள் என்பார்.

'வெளி

"நாதம் பரப்பிரம ஒளிமீதே
ஞானம் சுரப்ப, மகிழ் ஆநந்த சித்தியோடெந்
நாளும் களிக்க பதம் அருள்வாயே"

என்று பரம அன்பொடு பாடினர். பதம் அருள்வாயே என்பதற்கு, சிறந்த ஒரு மொழி உபதேசம் செய்தருள் என்று பொருள் கொள்ளலுமாம்.

ஆண்டாய்நீ யம்பலத்தில் அன்பர்களை என்கின்றுர்
தாண்டவம்கண் டுன்னடிமை தான்வாழ்வ தென்றேயோ

"ஊழி உணர்வார்கள் தங்கள் வினைதீர"
"ஊனும் உயிராய் வளர்ந்து
ஓசையுடன் வாழ்வு தந்த
ஊதிமலை மீதுகந்த பெருமாளே"

எனவும்,

"வெளியே திரியுமெய்ஞ் ஞான யோகிகள்
உளமே உறைதரு குமரா"

எனவும், சுருதிமுடி மோனம் எனும் திருப்புகழில்,

"துரியநிலை யேகண்ட முத்தரித யாகமலம்
அதனில்வினை யாநின்ற அற்புதசு போதசுக
சுயபடிக மாஇன்ப பத்மபதம்"

எனவும்,

"உததரிச மாம்இன்ப புத்தமிர்த போதசுகம்
உதவும் அமலா நந்த"

எனவும் வரும் திருப்புகழ்ப் பகுதிகள், இங்கு நினைக்கத் தக்கவை.

முருகோனே! கடப்ப மலர் அணிமார்பா! பெருமாளே! சிவனருள் பெருக, அதனால் வினைகள் அழிய, அதன்பின் சிவோஹம் பாவனை சித்திக்க, அதனால் முனைப்பு அடங்க, தேகாபிமானம் தீர, ஞானகாய பரநாத பரப்ரஹ்ம ஜோதியை உணரும் சிவ ஞானம் உயர்ந்தெழ, ஆனந்த சித்தி உண்டாகும்.

அதனில் இரண்டறக் கலந்து அடியேன் இருக்க, திருவடி தரிசனம் தந்தருள் என்று வேண்டும் பகுதியை ஓதும்போது,

"சீவன் ஒடுக்கம் பூதஒடுக்கம் தேற உதிக்கும் சிவஞான
தீப விளக்கம் காண எனக்குன் சீதள பத்மம் தருவாயே"

எனும் திருப்புகழ் நாதம் நினைவில் புகுந்து நிருத்தம் புரிகிறது அல்லவா!

வாழ்க உலகம்! வாழ்க அருணை வள்ளல்!

ஓம்.

பிறந்திறவா நின்னைப் பேசிமகிழ் கொள்ளேன்
மறந்தேன் மகியில் மயங்கல் மரபேயோ

The Divine Elections

Hour after hour, there is a Divine Election which is taking place continuously all through life, opposed to the well-known periodic political elections, and day after day man is put to election and as he elects he determines his position and future. A thousand attractions claim his vote and adoption, and a *thousand promises are held* out to his covetous imagination. The glamour of *publicity* is not the least of the persuading invitations to vote. It is a regular market of mutual denunciatians, except for a few sadhus who seem to watch *and do not bestir themselves* to influence the vote. God is a candidate and seeks the vote of man, not for Himself but for the sovereignty and the blessedness of the voter. This God candidate is not a partisan.

He tells everybody *that* atma never perishes, but that every physical body is bound to die. He says that the truly gallant nobleman ought "**to do and die.**" To live, He instructs, is for doing the right, and to do what is right is what a man ought to elect for. He instructs through his countless agents and leaves the man, the voter, to sink or to rise as he determines for himself. *This is what Sri Krishna told Arjuna. Having* instructed and informed Arjuna as to the correct position of the facts of all human life, He left Arjuna to decide for himself to fight for the right and die perhaps, but gain the portals of immortal fame and *eternal joy or to choose the easy slippery* road of bodily comfort leading to ignominy and suffering. All the wordly attractions stand before us and woo us for adoption,—the joys of the material world in a fast diminishing life.

Judgment and instinct stand behind every voter. The pleasures of the world and their literature are brandished on one side and the literature of the saints and bhaktas are offered on the other side. Life or death is the issue. Man is called on to vote for the one or the other.

The Rishaba—the Sacred Bull on which Siva strides and which Sri Krishna tends, is the symbol of God. There are other symbols of pleasure. Amidst this war of symbols, man has to take his life into both his hands and decide on whom he will elect. God's victory is the victory of the world, even of him who voted against God. If man does not vote for God, it means the defeat and damnation of man. Man owes to himself to vote for God and besides this, he has to do propaganda for the Lord. Religious lectures, bhajanas, special congregational religious activities of every denomination are the propaganda of His servants, Bhaktas. To those who know not the **pros** and **cons** of the divine election, to vote for God is to vote for the successful party. Hence listen to the voice from above and save yourself and the world. "Vote for God and good men."

Om Tat Sat. *Thiruppugal Mani.*

கவனிப்பு :

துன்முகி வருட சந்தா இவ்விதமுடன் முடிவடைகிறபடியால், ஹேவிளம்பி புது வருட சந்தா ரூ. 2-4-0 அனுப்பவும்.

Compliance with Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956

For IV

AMIRTHAVACHANI

1. *Place of Publication:*	...	54, Bunder Street, Madras-1
2. *Periodicity of its Publication:*	...	Monthly
3. *Name of Printer:*	...	K. V. Jagannathan
Nationality:	...	Indian
Address:	...	91, Mount Road, Madras-18
4. *Name of Editor:*	...	S. Muthuswami
Nationality:	...	Indian
Address:	...	54, Bunder Street, Madras-1
5. *Name of Publisher:*	...	S. Muthuswami
Nationality:	...	Indian
Address:	...	54, Bunder Street, Madras-1
6. *Name and Address of individuals who own the news papers:*	...	S. Muthuswami, Sole Proprietor, 54, Bunder Street, Madras-1

I, S. Muthuswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated 11*th March* 1957.

(Sd.) S. MUTHUSWAMI
Signature of Publisher.

622

செய்வகை யறியேன் சிறியனேன் அந்தோ
சிறுமையாம் உலகில் சிந்தைநைகின்றேன்
பொய்வகை புரிந்த தன்றிநின் னருளைப்
புரிந்திடேன் உய்யுநாள் உளதோ?
உய்வகை காட்டி உணர்த்தி நீ அருடி
உன்னடி மலரே உறுதுணை ஐயா!
மெய்வகை யுணர்வார் போற்றுறும் வேத
மெய்விளக் காகி விளங்குமெய்ப் பொருளே!

18586

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
ஸ்ரீஸீ
நெ. 1506

Regd. M. No. 5380, Amirthavachani (1957 பங்குனி—அமிர்தவசனி)

623-

Coffee
Ours for Quality

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி - மதுரை

Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

அரிய தெய்வ அருள் நூல்கள்

குகஸ்ரீ. பு. பா. ரசபதி விரிவுரையுடன்

ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அனுபூதி	1	0	0
" 6 திருவகுப்புகள்	1	8	0
ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ்	2	0	0
ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா	2	0	0
ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா	2	0	0
ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல்	1	8	0
திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள்	0	6	0
திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்)	0	12	0
கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன்	1	0	0
தேவி தாஸர்கள் (அச்சில்)			
சிவநேயச் செல்வர்கள் "			
கணபதி பக்தர்கள் "			
முருகனடியார் "			

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18

Edited & Published by ...